# பொன் வண்ண அவதாரம்
## (ஸ்ரீகௌரங்கா - ஸ்ரீசைதன்ய மகா பிரபு)

ஒன்றாம் பதிப்பு
March 7, 2023 (கௌர பூர்ணிமா)
*Version 1.10*

**ஸ்ரீ கௌரங்கா ராதா மதன் மோகன் ஆலயம்**
(கொட்டாரம், கன்னியாகுமரி)

**ஒரே இறைவன்!**
**ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.**

ஒரே மந்திரம்
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்தப் புத்தகத்தை தமிழில் வெளியிட பல பக்தர்களும் பக்தைகளும் மிகவும் துணை செய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியக் காரணமாகும். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.


**ஆசிரியர்:**
Disciple of Yuga Acharya Srila Narayana Goswami Maharaja,
Dr. பகவதி காந்த தாஸா



**சரிபார்த்தல்:**
ஸ்ரீமதி ராதிகா தேவி தாஸி
ஸ்ரீமதி கிருஷ்ண பிரியா தாஸி
ஸ்ரீமதி இலட்சுமி (தட்டச்சு)

**புத்தகம் அச்சிட நிதி உதவி வழங்கியவர்கள்:**
Madan Mohini Devi Dasi (NC, USA)
Dr. Nava Kishori Devi Dasi (NC, USA)

**அச்சிடல்:**
Dr. அஜய் கிருஷ்ண தாஸா

**வெளியீடு:** கோகுல் பவன்
Opp: மாருதி ஸ்டோர்ஸ்
கொட்டாரம் - 629703,
கன்னியாகுமரி , தமிழ் நாடு,
இந்தியா.

**தொடர்பு:** bkdasa@gmail.com
gokulbhajan.com
youtube.com/c/bkdasa

Phone: +91 750 222 2794
+91 960 066 8797
+91 959 796 9492
+1 919 491 9536

# பொருளடக்கம்


ஸ்ரீசைதன்ய மகாபிரபு யார்?..........................................4

பிரம்மாண்டங்களும் யுகங்களும்.....................................7
பகவானின் மூன்று சொரூபங்கள்.......................................9

சாஸ்திரங்கள் கூறும் கலியுக பொன்னிற அவதாரம் யார்?. 14
மகாபிரபுவின் தோற்றம்..................................................19
மகாபிரபு தோன்ற பல காரணங்கள்................................25
மகாபிரபுவின் நாம சங்கீர்த்தனம்....................................28
கொடியவர்களையும் மாற்றினார்......................................30
மாயாவாதத்தைத் தோற்கடித்தார்.....................................33
தென்னிந்திய யாத்திரை..................................................36
பூரி ஜகன்னாதரின் ரத யாத்திரை....................................42
பிருந்தாவனமும் கோஸ்வாமிகளும்.................................44
மாயாவாதிகளை வென்றார்.............................................46
நாம ஆச்சார்யார் ஸ்ரீல ஹரிதாஸ தாக்கூரா......................48
ஸ்ரீராதா கிருஷ்ண லீலைகளில் புகுந்தார்..........................50
மகாபிரபுவின் அற்புதமான மறைவு..................................52

பஞ்ச தத்துவங்கள்.........................................................55
ஸ்ரீநித்தியானந்த பிரபு.....................................................57
ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார்...............................................61
ஸ்ரீகதாதர பண்டிதர்........................................................64
ஸ்ரீவாச பண்டிதர்...........................................................67

ஹரிநாமம் ஜெபிப்போம்!................................................69
மகாபிரபுவுக்கு ஒரு கோகுல் பவன் பாடல்.......................70

# ஸ்ரீசைதன்ய மகாபிரபு யார்?

நாம் வாழும் இந்த பூலோகம், இறைவனால் படைக்கப் பட்ட அளவற்ற ஜட பிரம்மாண்டங்களில் ஒரு மிகச் சிறிய பிரம்மாண்டத்தின் சிறிய பாகம் ஆகும். ஒவ்வொரு பிரம்மாண்டத்திலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகள் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல்களை புரிகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால் ஒவ்வொரு பிரம்மாண்டத்திற்கும் இதே போல் வெவ்வேறு மும்மூர்த்திகள் உண்டு என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அனைத்து பிரம்மாண்டங்களையும், நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் இவற்றால் ஆன ஜட இயற்கையையும், மனம், புத்தி, அகங்காரம் ஆகியவற்றால் ஆன சூட்சுமத்தையும் தாண்டி மேலே சென்றால், ஆன்மீக லோகத்திலிருக்கும் பரம இறைவனின் அங்க காந்தியான பிரம்ம ஜோதியை தத்ரூபமாக உணர முடியும்.

எண்ணற்ற யோகிகளும், ஞானிகளும் இந்த பிரம்ம ஜோதியில் ஐக்கியமடைகிறார்கள். ஆனால் அதற்கும் மேலே இருப்பது பரம இறைவனின் ஆன்மீக உலகங்கள். அங்கு வசிக்கும் பரம இறைவனின் ஆன்மீக உடலிலிருந்து கிளம்பும் அங்க காந்தி தான் பிரம்மம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆன்மீக உலகங்களில் ஜடப் பொருட்கள் எதுவும் கிடையாது. இந்த ஆன்மீக லோகங்களில் வைகுந்த லோகங்கள் மிகவும் மேலானவை. ஆனால் வைகுந்த லோகங்களுக்கும் அப்பாலிருக்கும் உயர்ந்த ஆன்மீக லோகங்களைப் பற்றி

சாதாரண மக்களால் புரிந்து கொள்ள இயலாது.

இலட்சுமி தேவிகளுடன் வசிக்கும் ஸ்ரீமன் நாராயணர் இருக்கும் இடமான வைகுந்த லோகங்களுக்கும் மேலே இருப்பது கோலோகம். இந்த கோலோகத்தை வெகு சிலரே அறிவார்கள். கோலோகத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. ஒரு பாகம் கோலோக பிருந்தாவனம் என்றும், இன்னொரு பாகம் ஸ்வேத தீபம் என்றும் அழைக்கப்படுகின்றன. கோலோக பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீராதா ராணி, கோபியர்கள் மற்றும் கோபர்கள் மட்டுமே வசிக்கிறார்கள். இது பிரஜ லீல தாமம் எனப்படும். அவர் லீலைகளுக்காக பிரம்மாண்டங்களுக்கு வரும் போது கோலோக பிருந்தாவனத்தையே இங்கே கொண்டு வருகிறார். அவ்வாறு 5,000 வருடங்களுக்கு முன்னர் அவர் தன் கோபியர்கள், கோபர்கள் அனைவருடனும் வந்ததே நாம் இன்று காணும் பிருந்தாவனம். ஆனால் அதற்குப் பின்னால் இருக்கும் ஆன்மீக லோகத்தை உத்தம பக்தர்களால் மட்டுமே காண முடியும்.

கோலோக பிருந்தாவனத்தின் இன்னொரு பாகமான ஸ்வேத தீபத்தில், இதே ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராதா ராணியுடன் ஐக்கியமான விஷேசமான ஆன்மீக சொரூபத்தில் வசிக்கிறார். அவரே ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஆவார். இந்த ஸ்வேத தீபம் ஒரு ஆவுதர்ய தாமம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. கோலோக பிருந்தாவன ஸ்ரீகிருஷ்ணர், பிரம்ம தேவரின் ஒரு நாளில் ஒரே ஒரு தடவை மட்டுமே அந்தந்த பிரம்மாண்டங்களுக்கு வருகிறார். பிரம்ம தேவரின் தற்போதைய பகல் நேரத்தில், அவர் இங்கு சுமார் 5,000 வருடங்களுக்கு முன்பு துவாபர யுகத்தின் இறுதியில் தோன்றினார். அதைத் தொடர்ந்து வரும் கலியுகத்தில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு கலியுக தர்மமான 'ஹரி நாம

சங்கீர்த்தனத்தை' தொடக்கி வைக்க வருகிறார். கலியுகத்தில் நாம சங்கீர்த்தனத்தால் மட்டுமே ஒரு ஜீவன் முக்தியை அடைய முடியும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. மேலும், இந்த நாம சங்கீர்த்தனம் என்ற கலியுக தர்மத்தை, ஸ்ரீகிருஷ்ணர் தானே தன் பக்தனாக அவதரித்து, எவ்வாறு ஒரு பக்தன் பக்தி சாதகங்கள் செய்ய வேண்டும் என்பதை நடத்திக் காட்ட வருகிறார். எனவே அவர் கலியுகத்தில் பக்த அவதாரம் எனப்படுகிறார். மேலும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை மறைக்கப்பட்ட அவதாரம் (Hidden Avatar) என்றே சாஸ்திரங்கள் கூறுகின்றன. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு நடந்த அவரது பூலோக வருகையைப் பற்றி சுமார் 42 சாஸ்திரங்களில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே கூறப்பட்டுள்ளது.

ஆன்மீக அறிவில் நாட்டமில்லாதவர்களுக்கு ஸ்ரீசைதன்ய மகா பிரபுவைப் பற்றித் தெரிவதில்லை. அவர்கள் ஸ்ரீசைதன்ய மகா பிரபுவை ஏதோ ஒரு மகான் என்று மட்டுமே நினைக்கிறார்கள். ஆனால் அவரோ பரம இறைவன் ஸ்ரீகிருஷ்ணர். எனவே அவரது முழு பெயர் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகா பிரபு. இந்த சிறு புத்தகத்தில், ஸ்ரீசைதன்ய மகாபிரபுவைப் பற்றி மேலும் சிறிது அறிவோம்.

# பிரம்மாண்டங்களும் யுகங்களும்

மகாவிஷ்ணுவினால் படைக்கப்பட்ட எண்ணிலடங்காத பிரம்மாண்டங்களில், நாம் பிறந்திருக்கும் இந்த பிரம்மாண்டத்தில், நான்கு விதமான யுகங்கள் மாறி மாறி தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. சத்ய யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் என்ற இந்த நான்கு (சதுர்) யுகங்களும் பிரம்ம தேவரின் ஒரு பகல் நேரத்தில் மட்டும் ஆயிரம் தடவை வந்து போகும். ஒரு தடவை சதுர் யுகங்கள் வந்து போக பூவுலக கணக்கின் படி 43.2 கோடி (4.32 million) வருடங்கள் ஆகிறது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே நூறு வருடங்கள் வாழும் பிரம்ம தேவரின் ஒரு பகல் வேளையில் நம் பூலோக கணக்கின் படி 43,200 கோடி (4.32 billion) வருடங்கள் ஆகி விடும். மேல் உலகங்களுக்கும் கீழ் உலகங்களுக்கும் காலத்தில் இவ்வளவு பெரிய வித்தியாசங்கள் உள்ளன.

பிரம்ம தேவர் அவரது பகல் வேளையில் படைப்பு தொழிலில் ஈடுபடுகிறார். பின்னர் அவர் இரவில் தூங்க செல்லும் போது அவரது பிரம்மாண்டத்தில் பிரளயம் (மகா அழிவு) உண்டாகிறது. இதை சிவ பெருமான் செய்கிறார். இந்த பிரளயம் முடிவதற்கும் பிரம்ம தேவரின் பகலைப் போல் 43,200 கோடி (4.32 billion) வருடங்கள் ஆகும். எனவே பிரம்ம தேவரின் ஒரு முழு நாளுக்கு 86,400 கோடி வருடங்கள் ஆகின்றன. இப்படி அவர் 100 வருடங்கள் அல்லது 36,500 நாட்கள் வாழ்கிறார். இதற்குள் பதினான்கு மனுக்கள் தோன்றுகிறார்கள். எனவே பிரம்ம தேவரின் ஆயுள் காலம் நம் பூலோக கணக்குப்படி சுமார்

3,153,600,000 கோடி வருடங்கள்! இப்படி பிரம்மாண்ட லோகங்களின் கால கணக்கின் வித்தியாசத்தை ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்ற விஞ்ஞானி சார்பியல் கோட்பாடு (Relativity Theory) மூலம் நிரூபித்தார். ஆனால் இந்த கால வித்தியாச உண்மைகளை வேத சாஸ்திரங்களில் நாம் தெளிவாகக் காணலாம். எனவே ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கண்டு பிடித்தது ஒன்றும் புதியது அல்ல. விஞ்ஞான முறையில் அவர் இதை நமக்கு விளக்கியிருக்கிறார். அவ்வளவு தான்.

ஆனால் இந்த சார்பியல் கோட்பாடு, நம் ஜடவுலகங்களுக்கு மட்டும் தான் பொருந்தும். அனைத்து ஜட லோகங்களையும் தாண்டியிருக்கும் ஆன்மீக லோகங்களுக்கு இது பொருந்தாது. அனைத்து பிரம்மாண்டங்களையும் தாண்டி, அனைத்து வைகுந்த லோகங்களுக்கும் மேலே இருக்கும் கிருஷ்ண லோகத்துக்கு காலம் கிடையாது என்று நாம் சாஸ்திரங்களின் மூலம் அறிகிறோம்.

# பகவானின் மூன்று சொரூபங்கள்

பகவான் முக்கியமாக மூன்று சொரூபங்களாக தோன்றுகிறார்: (1) சுயம் பகவான் ஸ்ரீராதா-கிருஷ்ணர், (2) பரமாத்மா, (3) பிரம்மம். இதை ஸ்ரீமத் பாகவதம் தெளிவாகக் கூறுகிறது:

வதந்தி தத் தத்வ விதஸ்
தத்வம் யஜ் ஞானம் அத்வயம்
பிரம்மேத்தி பரமாத்மேதி
பகவான் இதி சப்த்யதே ... (பாகவதம் 1.2.11)

"இரண்டறப் பிரிக்க முடியாத பரம இறைவனை, முற்றும் அறிந்த ஞானிகள் பிரம்மம், பரமாத்மா, பகவான் என்று மூன்று சொரூபங்களில் இருப்பதாகக் கூறுகின்றனர்"

இந்த மூன்று விதமான சொரூபங்களில், பகவான் மட்டுமே ஆதி மூலம். அவரது அளவற்ற அங்க காந்தி (தேஜஸ்) என்ற எங்கும் நிறைந்த பிரம்ம ஜோதியே பிரம்மம் என்றழைக்கப் படுகிறது. இந்த பிரம்மம் என்று அழைக்கப்படும் ஆன்மீக வஸ்துவுக்கு உருவம் கிடையாது. எனவே இதை சகுண பிரம்மம் என்றும் அழைப்பார்கள். ஞானிகளும் யோகிகளும் இந்த சகுண பிரம்மத்தில் ஐக்கியம் அடைவதையே இலக்காக கொள்கிறார்கள். ஆனால் பகவானே பிரம்மத்தின் மூலம். மேலும் இந்த பகவான், தன் அங்க காந்தியான பிரம்ம ஜோதியில் பிரதி பிம்பமாக-பரமாத்வாவாகத் தோன்றி ஒவ்வொரு ஜீவராசியின் இதயத்திலும், மற்றும் ஒவ்வொரு அணுவிலும் உள்ளே புகுந்து விடுகிறார். இந்த

பரமாத்மாவை முக்கியமாக யோகிகள் பல காலம் தவம் இருந்து அடைய விரும்புவார்கள். எனவே ஞானிகளும் யோகிகளும் சுயம் பகவானை அடைவது இல்லை. அவர்கள் அவரது இரண்டாந்தரமான பிரம்மத்தையோ, பரமாத்மாவையோ தான் அடைகிறார்கள். அது மட்டுமல்ல, இவர்கள் பகவானே பிரம்மத்திலிருந்து மாயையின் சக்தியினால் தோன்றுகிறார் என்று சாஸ்திரங்களுக்கு எதிராக மாயாவாதம் பேசுகிறார்கள். இவர்களுக்கு சுயம் பகவானைப் பற்றியுள்ள உண்மை தெரியாது. சுயம் பகவானுக்கு கட்டுப்பட்ட ஒரு சிறு சக்தியே மாயா சக்தி. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மாயைக்குக் கட்டுப் பட்டவரல்ல.

ஸ்ரீமத் பகவத் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ஒவ்வொரு பிரம்மாண்டத்துக்கும் பிரம்மாவின் ஒவ்வொரு நாளிலும் ஒரு தடவை மட்டுமே சுயம் பகவானாக வருவதாக கூறுகிறார். பிரம்மாண்டங்களில் அவரது அவதாரங்கள் எண்ணில் அடங்காத அளவில் தோன்றினாலும், அவர் சுய ரூபமாக வருவது மிக அபூர்வம். அவ்வாறு பகவான் வரும் போது அவர் தன் அத்தனை விரிவங்கங்களையும், விஷ்ணுக்களையும் தன்னுள் கொண்டு வருகிறார். அவர் ஏழாவது மனுவின் காலத்தில் இருபத்து எட்டாவது சதுர் யுகத்தில் வரும் துவாபர யுகத்தில் மட்டுமே சுயம் பகவானாக பூலோகத்துக்கு வருகிறார். அவர் அவதாரமல்ல. அவர் சுயம் பகவான்.

அவ்வாறு சுயம் பகவானாக ஸ்ரீகிருஷ்ணர் சுமார் 5,000 வருடங்களுக்கு முன் துவாபர யுகத்தின் கடைசியில் பிருந்தாவனத்தின் கோகுலத்தில் தோன்றினார். ஸ்ரீகிருஷ்ணர் ஆதிமூலம். அவருக்கு பிறப்போ இறப்போ கிடையாது. ஆனால் அவர் பிரம்மாண்டங்களுக்கு வரும் போது லீலைகளுக்காக

மனிதர்களைப் போல் பிறப்பு இறப்புகளை ஏற்றுக் கொள்கிறார். இதைப் புரியாதவர்களை மூடர்கள் ('அவஜானந்தி மாம் மூடா.. ' - கீதை 9.11) என்றும் ஸ்ரீமத் பகவத் கீதையில் அவர் கூறுகிறார்.

எல்லா சத்ய யுகங்களிலும் ஜீவன்கள் அனைவரும் கிருஷ்ண அல்லது விஷ்ணு பக்தியுடன் வாழ்வார்கள். அவர்கள் மேலே குறிப்பிட்ட மூன்று சொரூபங்களைத் தவிர வேறு எந்த தெய்வங்களையும் வழிபட மாட்டார்கள். சத்ய யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் நான்கு கைகளுடன் வெள்ளை நிறமான அவதாரங்களை எடுப்பார். ஒவ்வொரு ஜீவனும் பரமஹம்சராக மாமிசம் எதுவும் சாப்பிடாமல் 100,000 வருடங்கள் வரையிலும் வாழ்ந்து, இறைவனை தியானத்தால் வழிபட்டு மோட்சம் அடைவார்கள்.

எல்லா திரேதா யுகங்களிலும் ஜீவன்கள் வேதங்களைப் படித்து, அவற்றில் கூறப்படும் யக்ஞங்களைச் செய்வார்கள். அவர்களுக்கு பிற தெய்வங்களை வழிபடுவதில் சிறிது நாட்டம் இருக்கும். ஆனால் ஆன்மீக அறிவையே அவர்கள் நாடுவார்கள். 10,000 வருடங்கள் வரையிலும் வாழ்ந்து, இறைவனை யக்ஞங்களால் வழிபட்டு தேவ லோகங்களை அடைந்து பின்னர் முன்னேறி கடைசியில் மோட்சம் அடைவார்கள். திரேத யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் நான்கு கைகளுடன் சிவப்பு நிறமான அவதாரங்களை எடுப்பார்.

துவாபர யுகங்களிலும் ஜீவன்கள் சுயநலம் கொண்டவர்களாக இருப்பார்கள். இந்த யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் கறுப்பு நிறமான அவதாரங்களை எடுப்பார். ஆனால் ஜீவன்களுக்கு பிற தெய்வங்களை வழிபடுவதில் நாட்டம் அதிகமாகவே இருக்கும். துவாபர யுகத்தில் ஜீவன்கள் 1,000 வருடங்கள் வரையிலும் வாழ

முடியும். அவர்கள் பல விதமான ஆலய வழிபாடுகள் செய்து கடைசியாக மோட்சம் அடைவார்கள்.

ஆனால் கலியுகம் மிகவும் கொடுமையானது. கலியுகத்தில், கலியின் உக்கிரத்தால் மேற்குறிப்பிட்ட எந்த விதமான வழிபாடுகளிலும் பயன் கிடையாது. தியானமோ, யக்ஞங்களோ, ஆலய வழிபாடுகளோ எதுவும் பயனளிக்காது. கலியுகம் எப்போதும் சண்டை சச்சரவுகள் நிறைந்தது. ஜீவன்கள் சோம்பல் உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஆன்மீக ஞானமின்றி, எப்போதும் அலைக்கழிக்கப்பட்டு, பல தெய்வங்களை வணங்குவார்கள். அவர்கள் 100 வருடம் வாழ்வதே மிகவும் அரிது. அசுத்தமான மாமிசம் போன்ற உணவுகளை உண்பதாலும், மனத்தை எப்போதும் பௌதீக விசயங்களில் செலவளிப்பதாலும் நோய்கள் ஏராளமாகத் தோன்றும். அத்யாத்மிகம், அதிபௌத்திகம், அதிதெய்விகம் என்ற மூன்று விதமான துன்பங்களால் ஜீவன்கள் அனைவரும் மிகவும் கஷ்டப்படுவார்கள். கலியுகத்தின் கடைசியில் 20 வருடங்கள் வாழ்வதே கடினம்.

ஆனால் இந்த கலியுகம் அனைத்து விசயங்களிலும் மோசமானதாக இருந்தாலும், ஒரு விஷயத்தில் இது மிகவும் நன்று. ஒருவன் மற்ற அத்தனை யுகங்களிலும் பெறும் பலன்களை, கலியுகத்தில் ஹரி நாம சங்கீர்த்தனம் மட்டுமே செய்து பெற்று விடுகிறான்! கலியின் உக்கிரத்தால் ஹரி நாமங்களைத் தவிர எந்த மந்திரங்களுக்கும் பலன் கிடைக்காது. இதையே சாஸ்திரங்கள்,

ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்தி கலௌ நாஸ்தி
நாஸ்தி ஏவ கதிர் அன்யதா ... (பிருஹன் நாரதீய புராணம்)

‘கலியுகத்தில் ஹரி நாம சங்கீர்த்தனத்தைத் தவிர வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது, வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது, வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது' என்று மூன்று தடவை கூறி வலியுறுத்துகிறது.

நாம் இப்போது இத்தகைய ஒரு கலியுகத்தில் இருக்கிறோம். ஆனால் இந்த கலியுகம் சாதாரண கலியுகம் அல்ல. சுயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த துவாபர யுகத்துக்கு அடுத்ததாக வரும் கலியுகம் ஆகும். இதற்கு 'தன்ய கலி' என்று பெயர். எனவே நாம் விசேசமான 'தன்ய கலி' என்ற கலியுகத்தில் இருக்கிறோம். இந்த தன்ய கலி யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் பொன்னிறமாக அவதரிப்பார் என்றும், அவர் பின்னர் சன்னியாசம் எடுத்து, தன் (ஸ்ரீகிருஷ்ணரின்) சுத்தமான பக்தன் எப்படியிருப்பான் என்பதை தன் வாழ்க்கை மூலம் காட்டுவார் என்றும், கலியுக தர்மமான ஸ்ரீகிருஷ்ண நாம சங்கீர்த்தனத்தை துவக்கி வைப்பார் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஏராளமானவர்கள் யார் யாரையோ கலியுக அவதாரம் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றி எந்த சாஸ்திரத்திலும் கூறப்படவில்லை.

நாம் இந்தப் புத்தகத்தில், பொன் நிறமான கலியுக அவதாரம் உண்மையில் யார் என்பதைப் பற்றியே காணப் போகிறோம்.

# சாஸ்திரங்கள் கூறும் கலியுக பொன்னிற அவதாரம் யார்?

ஒவ்வொரு சதுர் யுகங்களிலும் பகவானின் அவதார தோற்றங்கள் அனைத்தையும் முன் கூட்டியே சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. அவ்வாறே ஶ்ரீசைதன்ய மகாபிரபுவின் அவதாரம் குறித்தும், நாற்பதுக்கும் மேற்பட்ட சாஸ்திரங்களில் முன்னதாகவே கூறப்பட்டுள்ளன. ஶ்ரீசைதன்ய மகாபிரபு சுமார் 500 வருடங்களுக்கு முன்பு சசி தேவிக்கும், ஜகன்னாத மிஸ்ரா-வுக்கும் புதல்வனாக கௌர பூர்ணிமா அன்று தோன்றினார். இந்த சசி தேவிதான் கோகுலத்தில் ஶ்ரீகிருஷ்ணரின் தாயாரான யசோதா தேவியார் ஆவார். ஜகன்னாத மிஸ்ராதான் கிருஷ்ணரின் தந்தையான நந்த மகாராஜா ஆவார். இந்த சிறு நூலில் ஶ்ரீசைதன்ய மகாபிரபுவின் பூலோக வருகையைப் பற்றி எழுதியிருக்கும் அத்தனை சாஸ்திரங்களையும் கொடுத்தால் இந்த நூல் பெரிதாகி விடும் என்பதால் சிலவற்றை மட்டும் உதாரணத்துக்கு கீழே கொடுக்கிறோம்:

(1)

அஹம் பூர்ணோ பவிஷ்யாமி, யுக சந்த்யௌ விஷேஸதஹ
மாயாபூரே நவத்வீபே, பவிஷ்யாமி சசி சுதஹ... (கருட புராணம்)

“நான் சசி தேவியின் புதல்வனாக நவத்வீப்பில் உள்ள மாயாபூர் என்ற புனித இடத்தில் கலியுகம் ஆரம்பிக்கும் சந்தி சமயத்தில் தோன்றுவேன்.”

(2)

கலேஹ் ப்ரதம சந்த்யாயாம் கௌராங்கோ அஹம் மஹீ தலே
பாகீரதீ தடே ரம்ய பவிஷ்யாமி சசி சுதஹ் ... (பத்ம புராணம்)

“நான் கலியுகத்தின் முதல் சந்தியில், பூலோகத்தில் அழகான கங்கை நதியின் தீரத்தில் சசி தேவியின் புதல்வனாக பொன் வண்ண நிறத்தில் தோன்றுவேன்"

(3)

அஹம் ஏவ கலௌ விப்ர நித்யம் ப்ரச்சன்ன விக்ரஹ
பகவத் பக்த ரூபேண லோகான் ரட்ஷாமி சர்வதா
... (நாரத புராணம்)

“கலியுகத்தில் நானே என் பக்தனாக வேடம் பூண்டு, அத்தனை உலக ஜீவன்களையும் ரட்சிப்பேன்.”

(4)

கலேஹ் ப்ரதம சந்த்யாயாம் லட்சுமி காந்தோ பவிஷ்யதி
தாரு ப்ரஹ்ம சமீபஸ்தஹ் சன்னியாசி கௌர விக்ரஹ:
... (கருட புராணம்)

“கலியுகத்தின் முதல் சந்தியில் பகவான் பொன்னிறத்தில் தோன்றுவார். அவர் முதலில் லட்சுமி தேவியை மணந்து பின் சன்னியாசம் பூண்டு தாரு பிரம்மத்தை வழிபடும் ஜகநாத் பூரியில் வசிப்பார்.”

(5)

கோலோகம் ச பரித்யஜ்ய லோகானாம் த்ராண காரணாத்
கலௌ கௌராங்க ரூபேண லீலா லாவண்ய விக்ரஹ
... (மார்க்கண்டேய புராணம்)

“கலியுகத்தில் ஜீவன்களை காப்பாற்ற வேண்டி, நான் என் கோலோகத்தை விட்டு பூலோகம் செல்வேன். அங்கே அழகுடன் கௌரங்கா என்ற பெயரில் தோன்றுவேன்"

(6)

ஸ்வர்ண வர்ணோ ஹேமாங்கோ வராங்கஸ் சந்தனாங்கதி
சன்னியாச க்ருச் சம சாந்தோ நிஷ்டா சாந்தி பராயணஹ
... (விஷ்னு சஹஸ்ரநாமம்)

“பகவான் பொன் வண்ன நிறத்தில், தேகம் எங்கும் சந்தணத்தைப் பூசிக் கொண்டு, பின்னர் சன்னியாசம் எடுக்கிறார். அவர் தான் உண்மையான பக்திக்கும் ஆனந்தத்துக்கும் இருப்பிடம்"

(7)

பௌர்ண மாஸ்யாம் பால்குணாஸ்ய பால்குணி ரட்ஷ யோகா தாஹ
பாவிஷ்யே கௌரா ரூபேணா சாசி கார்பே புராண்தாராத்
... (வாயு புராணம்)

“பால்குண மாதத்தில், பால்குணி பௌர்ணமியுடன் வரும் நாளில், நான் பொன் வண்ண நிறத்தில் ஜகன்னாத மிஷ்ராவுக்கும் சசி தேவிக்கும் மகனாகப் பிறப்பேன்"

8)

வைவஸ்வதாந்தரே ப்ரஹ்மன், கங்கா தீரே சு புண்ய தே
ஹரி நாம ததா தத்வா, சண்டாளான் ஹதிகாம்ஸ் ததா
ப்ராஹ்மணான் சத்ரியான் வைஷ்யான், ஸ்டஷோ 'த சஹஸ்ரஹ
உத்தரிஸ்யாமி அஹம் தத்ர், தப்த ஸ்வர்ண கலேவரஹ
சன்னியாஸஸ் ச கரிஷ்யாமி, காஞ்சன க்ராமம் ஆஸ்திதஹ
... உர்த்வாம்நாய சம்கிதம்

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறினார், "ஓ பிராமணா! நான் வைவஸ்வத மன்வந்தராவில் கங்கை நதி தீரத்தில், பொன்னிற அவதாரமாக அவதரித்து ஹரி நாமத்தை நாய் மாமிசத்தையும் உண்ணும் சண்டாளர்கள், தெருவை சுத்தம் செய்யும் துப்புரவாளர்கள் போன்ற அனைவருக்கும் வினியோகம் செய்வேன். இவ்வாறு எண்ணிக்கைக்கு அடங்காத மக்களுக்கு - பிராமணர், சத்திரியர், வைஷ்யர், சூத்திரர் என எவ்வித வேறுபாடும் இன்றி ஹரி நாமத்தை வழங்குவேன். மேலும் கங்கை நதி தீரத்திலுள்ள காஞ்சன கிராமத்தில் சன்னியாசம் எடுப்பேன்."

மேலே கொடுக்கப்பட்டுள்ளவை சிறு உதாரணங்களே. ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பொன்னிற அவதார வருகையை கீழ்க்கண்ட சாஸ்திரங்களிலும் காணலாம்:

| | |
|---|---|
| ஸ்ருதி சாஸ்திரம் | ஸ்ரீசைதன்ய உபனிஷத் |
| வாயு புராணம் | விஷ்ணு ஸஹஸ்ர நாமம் |
| அதர்வ வேதம் | சாம வேதம் |
| ஸ்ரீகிருஷ்ண உபனிஷத் | சந்த்யோக உபனிஷத் |

| | |
|---|---|
| முண்டக உபனிஷத் | ஸ்மிருதி சாஸ்திரம் |
| நாரத பஞ்சராத்ரம் | ஸ்ரீமத் பாகவதம் |
| ஆதி புராணம் | நாரத புராணம் |
| கூர்ம புராணம் | கருட புராணம் |
| தேவி புராணம் | நரசிம்ஹ புராணம் |
| பத்ம புராணம் | பிரம்ம புராணம் |
| அக்னி புராணம் | சௌர புராணம் |
| மத்ஸ்ய புராணம் | பவிஷ்ய புராணம் |
| மார்க்கண்டேய புராணம் | வராக புராணம் |
| வாமன புராணம் | உப புராணங்கள் |
| விஷ்ணு புராணம் | அனந்த சம்கிதம் |
| நாராயண சம்கிதம் | உர்த்வம்னய தந்திரம் |
| கபில தந்திரம் | கிருஷ்ண யமலா |
| பிரம்ம யமலா | விஸ்வசர தந்திரம் |
| குலர்ணவ தந்திரம் | ஜெய்மினி பாரதம் |
| விஷ்ணு யமலா | பிரம்ம ரஹஸ்யம் |
| யோக வவிஸ்தம் | ஸ்கந்த புராணம் |
| ஸ்வேதஸ்வதர உபனிஷத் | |

இவ்வாறு 40-க்கும் மேற்பட்ட சாஸ்திரங்களில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கலியுக பொன்னிற அவதாரம் பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளன. இனி அவரது சரித்திரத்தைக் காண்போம்.

# மகாபிரபுவின் தோற்றம்

சுமார் 500 வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் புனிதமான கங்கை நதியோரத்தில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றினார். அவர் 16-ம் நூற்றாண்டில் வங்காளத்தில் தோன்றி கிருஷ்ண பக்தி ரசத்தை உலகெங்கும் உணர்த்த வந்த ஸ்ரீகிருஷ்ண பகவானின் பக்த அவதாரம். அவர் உணர்த்திய பக்தி இயக்கம் இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் தத்துவக் கோட்பாடுகளை மாற்றி அமைத்தது மட்டுமன்றி, கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைகளையும் உலகெங்கும் மாற்றி அமைத்தது. அவரது பக்தி சித்தாந்தங்கள் ஐந்து முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை பஞ்ச தத்துவங்கள் என அழைக்கப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு தத்துவத்திற்கும் தனித்தனியாக மகான்கள் தோன்றினார்கள். ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார், ஸ்ரீநித்தியானந்த பிரபு, ஸ்ரீசைதன்ய மாகபிரபு, ஸ்ரீகதாதரர், ஸ்ரீவாசர் என்பவர்களே அவர்கள். இவர்கள் ஐந்து பேரையும் சேர்த்து பஞ்ச தத்துவங்களாக வழிபடுவதே கிருஷ்ண பக்தி மார்க்கம் ஆகும்.

பஞ்ச தத்துவ மந்திரம்:

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய பிரபு நித்தியானந்த
ஸ்ரீ அத்வைத கதாதார ஸ்ரீவாசாதி
கௌர பக்த விருந்த

இனி நாம் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பக்தி தத்துவக் கொள்கைகளையும், அவரது அற்புதங்களும் ஆச்சரியங்களும்

நிறைந்த சரித்திரத்தையும் காண்போம். இங்கு குறிப்பிடும் தகவல்கள் அனைத்தும் சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீகிருஷ்ண தாஸ கவிராஜ கோஸ்வாமிகளால் வங்காள மொழியில் எழுதப்பட்டு, பின்னர் அதை ஆங்கிலத்தில் ஸ்ரீஅ.ச பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட சைதன்ய சரிதாம்ருதத்தில் இருந்து எடுக்கப்பட்டவை. ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு மேற்கு வங்காளத்தில் நவதீபத்தில் உள்ள மாயாப்பூர் என்ற கிராமத்தில் அவதரித்தார். அவரது வருகைக்கு ஒரு முக்கியமான காரணமாக இருந்தவர், உத்தமமான வைஷ்ணவ ஆச்சாரியரான அத்வைத ஆச்சாரியார் ஆவார். மாயையின் இருளில் சிக்கி அல்லல்படும் ஜீவன்களின் மேல் அவர் இரக்கம் கொண்டார். உலக மக்கள் எப்போதும் பணம், புகழ், மற்றும் இந்திரிய சுகங்களில் மட்டுமே தன் வாழ்நாட்களைக் கழிப்பதைக் கண்டு மிகவும் கவலைப்பட்டார்.

ஸ்ரீகிருஷ்ணரே இந்த உலகிற்கு வந்து மக்களை விடுவிக்க வேண்டும் என மன்றாடினார். அவரது தீவிரமான வேண்டுதலும் ஒரு காரணமாக, ஸ்ரீ கிருஷ்ணரே ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவாக அவதரித்தார். அவரது தாயாரான சசி தேவி கர்ப்பமானதும், ஏராளமான தேவர்களும் தேவிகளும் சுற்றி வந்து வணங்கி சென்றனர். இதைக் கண்ட சசி தேவிக்கும் ஜகன்னாத மிஸ்ராவுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு அவதரிப்பதற்கு முன், சசி தேவிக்கும் ஜகன்னாத மிஸ்ராவுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்திருந்தது. அவருக்கு விஸ்வரூபர் என்று பெயர் வைத்திருந்தனர். ஆனால் சீக்கிரமாகவே விஸ்வரூபர்

சன்னியாசத்தை ஏற்றுக் கொண்டு வீட்டைத் துறந்து போய் விட்டார். பின் பல வருடங்களுக்குப் பின், ஶ்ரீநித்தியானந்த பிரபு அவரை பந்தர்பூரில் சந்தித்தார் என்றும், அச்சமயம் விஸ்வரூபர் தன் உடலை விட்டு ஶ்ரீநித்தியானந்த பிரபுவிடம் ஐக்கியமடைந்ததாகவும் அறிகிறோம். ஶ்ரீபலராமரின் விரிவங்கத்தில் தோன்றிய மூல சங்கர்ஷணரே இந்த விஸ்வரூபர்.

ஶ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு 1486-ம் வருடம் மாயாப்பூர் என்னும் கிராமத்தில் ஒரு வேப்ப மரத்தின் அடியில் பிறந்தார். அந்த இடத்தில் தற்போது ஒரு கோவில் கட்டப்பட்டுள்ளது. அவர் புனிதமான வேப்ப மரத்தின் கீழ் பிறந்ததால் அவருக்கு தாயார் சசி தேவியார் 'நிமாய்' என்று பெயர் இட்டார். இந்தக் கோவிலின் கருவறையில், நிமாய், தாய் சசி தேவியார், மற்றும் தந்தை ஜகன்னாத மிஸ்ரா அவர்களின் உருவங்களும் உள்ளன. நிமாய் சிறு குழந்தையாக இருக்கும் போது எப்போதும் அழுது கொண்டிருப்பது வழக்கமாம். ஆனால் தன் பெற்றோர் அல்லது சுற்றியிருக்கும் யாராவது 'ஹரிபோல்' என்று கூறினால் அழுகை உடனே நின்று விடுமாம். அவர் வருங்காலத்தில் நாம சங்கீர்த்தனத்தால் கலியுக மக்களை விடுவிப்பதை அது அப்போதே காட்டியது. அவரது பால்ய பருவ லீலைகளை ஶ்ரீசைதன்ய சரிதாமிருதம் மிக அருமையாக விவரிக்கிறது.

ஶ்ரீ சைதன்ய மகாபிரபு வேத நூல்களையும், தர்க்க சாஸ்திரங்களையும் முறைப்படி குருவின் வழியாகக் கற்று மிகவும் புலமை பெற்றார். மிகவும் புகழ் வாய்ந்த மேதைகளுடன் தர்க்கம் செய்தார். தன் இளமைப் பருவத்திலேயே காஷ்மீரத்திலுள்ள எவராலும் தோற்கடிக்க முடியாத மிகவும் புகழ் பெற்ற கேசவ

காஷ்மீரி என்ற பிராமணரை தர்க்கத்தில் வெகு சுலபமாக வென்றார். தோற்கடிக்கபட்ட கேசவ காஷ்மீரி தன் இஷ்ட தேவதையான ஸ்ரீசரஸ்வதி தேவியை நினைத்து கவலையுடன் முறையிட்டார். அன்று இரவு ஸ்ரீசரஸ்வதி தேவி அவரது கனவில் தோன்றி, 'நீ நான் வணங்கும் இறைவனையே வெல்ல விரும்புகிறாயே! அது எப்படி முடியும்? நீ அவரிடம் போய் மன்னிப்புக் கேள்' என்று கூறி மறைந்தாள். கேசவ காஷ்மீரி ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் சரணடைந்தார். இந்த சம்பவம் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு பெரும் புகழையும், பண்டிதர் என்ற பட்டத்தையும் அளித்தது.

அக்காலத்து கலாச்சாரத்தின் படி தன் 15-ம் வயதில் மகாலட்சுமியின் அவதாரமான லட்சுமிபிரியா என்ற மங்கையை திருமணம் செய்தார். அப்போது ஸ்ரீஇராமானுஜாச்சாரியார், ஸ்ரீஅனந்தர் என்ற பெயரில் அவதரித்து இந்தத் திருமணத்தை நடத்தி வைத்ததாக ஸ்ரீநவதீப தாம மகாத்மியம் (15.55,56) என்ற நூல் கூறுகிறது. ஆனால் வெகு விரைவில், மகாலட்சுமி தன் அவதார நோக்கத்தை முடித்து, திரும்பி வைகுந்த லோகம் சென்ற நிகழ்ச்சியை பாம்பு தீண்டப்பட்டு இறந்த சம்பவத்தினால் நாம் அறிகிறோம். அத்துடன் ஸ்ரீசைதன்ய மகாபிரபு மகாலட்சுமியின் வேண்டுதலால் எடுத்த 'கௌர நாராயண' அவதார லீலையை முடித்துக் கொண்டு, அடுத்து கௌர அல்லது பிரேம புருஷோத்தம லீலையை ஆரம்பித்தார்.

எனவே, இரண்டாவதாக பக்தி தேவியின் அவதாரமான விஷ்ணுபிரியாவை மணந்தார். இதிலிருந்து தான் அவரது உண்மையான கௌர லீலை ஆரம்பித்தது. அவர் ஸ்ரீசங்கராச்சாரியார் வழி வந்த ஸ்ரீகேசவ பாரதியிடம் சன்னியாசம்

வாங்கிக் கொண்டார். ஸ்ரீசைதன்ய மகாபிரபு மாயாவாத வழியில் வந்த சன்னியாசியிடம் சன்னியாசம் வாங்கியதற்கு முக்கியமான காரணங்கள் உண்டு. ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் அவதாரத்துக்கு இன்னொரு முக்கியமான காரணம் மாயாவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதே. இந்த மாயாவாத சன்னியாசத்தினால் தான் அவரால் ஏராளமான மாயாவாதிகளை ஹரிநாம சங்கீர்த்தனத்துக்கு மாற்ற முடிந்தது. மேலும் அவர் சன்னியாசம் பெறும் போது ஸ்ரீகேசவ பாரதியிடம் எனக்கு இந்த மந்திரத்தைத் தானே கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டு அவரது காதில் மகா மந்திரத்தை கூறினார். எனவே, உண்மையில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு கொடுத்த மந்திரத்தைத்தான் ஸ்ரீகேசவ பாரதி திரும்ப ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்குக் கொடுத்தார்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு சன்னியாசம் எடுத்த சம்பவம் ஸ்ரீவிஷ்ணுபிரியா தேவியையும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் தாயார் சசி தேவியையும் மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியது. ஸ்ரீவிஷ்ணுபிரியா ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பாதுகைகளையே தன் வாழ்நாட்கள் முழுவதும் வணங்கி வந்ததாக அறிகிறோம். அப்படியானால் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஏன் இரண்டாவது திருமணம் செய்தார் என்றும், பின் ஏன் சன்னியாசம் எடுத்தார் என்றும் கேட்கலாம். அதற்கும் காரணங்கள் உண்டு.

ஸ்ரீவிஷ்ணுபிரியா பக்தி தேவியின் அவதாரம். பகவானை பிரிந்த துயரத்தில் வழிபடுவதே பிரேம பக்தியின் மிக உத்தமமான நிலை. இதைத்தான் நாம் ஸ்ரீமதி ராதாராணி மற்றும் கோபியர்களின் வாழ்க்கையிலும் காண்கிறோம். முன்பு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராமராக அவதரித்து, வனவாசத்தின் போது ஸ்ரீநவத்வீபத்திற்கு வந்தார். அப்போது இந்த ஸ்ரீநவத்வீபத்தைக்

கண்டு சிரித்தார். இதைக் கண்ட சீதாதேவி ஸ்ரீராமரின் சிரிப்புக்கு என்ன காரணம் என்று கேட்டாள். அதற்கு ஸ்ரீராமர், ‘இந்த அவதாரத்தில் உன்னைப் பிரிந்து துயரத்துடன் நான் உன்னை வணங்குவேன். பின்னர் வரும் கலியுகத்தில் இதே நவத்வீபத்தில் நான் பொன்னிற வண்ணத்தில் அவதரிக்கும் போது, என்னைப் பிரிந்த துயரத்துடன் நீ என்னை வழிபடுவாய்' என்று கூறினார்.

இராவணனால் கடத்திச் செல்லப்பட்டு, பின் ஸ்ரீராமரால் மீட்கப்பட்டு, அதன் பின் அயோத்தியை அடைந்த சீதாதேவி ஸ்ரீராமராலேயே காட்டுக்கு அனுப்பப்பட்ட சரித்திரத்தை நாம் அறிவோம். அப்போது நடத்திய யாகத்தில், ஸ்ரீராமர் சீதாதேவியின் உருவத்தை பொன்னால் ஆன விக்கிரகமாக செய்து வழிபட்டார். பூமாதேவியின் அம்சமான சீதாதேவி, பக்தி தேவியான ஸ்ரீவிஷ்ணுபிரியாவின் அம்சம்.

கௌர லீலையில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவும் பக்தி தேவியான ஸ்ரீவிஷ்ணுபிரியாவும் பிரேம பக்தியின் உன்னதமான நிலையை நமக்கு விளக்க இவ்வாறு லீலைகள் செய்தார்கள். ஒவ்வொரு நாளும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை நினைத்து மகாமந்திரத்தை ஜெபித்துக்கொண்டே ஸ்ரீவிஷ்ணுபிரியா தன் காலத்தைக் கழித்தாள். ஒவ்வொரு மகாமந்திர ஜெபத்திற்கும் ஒரு அரிசியை தட்டில் சேர்த்து, அதை மட்டுமே சமைத்து ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு படைத்து அந்த சிறு பிரசாதத்திலேயே ஸ்ரீவிஷ்ணுபிரியா தேவி தன் வாழ்நாட்களை கழித்தாள்.

# மகாபிரபு தோன்ற பல காரணங்கள்

ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார் ஸ்ரீகிருஷ்ணரை வேண்டி கங்கை நதி தீரத்தில் துளசியையும் புனித கங்கை நீரையும் அளித்து, கலியுகத்தில் பாவங்களால் துன்பமடையும் ஜீவன்களை காக்க வேண்டி ஸ்ரீகிருஷ்ணரிடம் விண்ணப்பித்தது ஒரு காரணம். மாயாவாதத்தை அழிப்பதும் இன்னொரு காரணம். ஆனால் அவரது வருகைக்கு மேலும் சில முக்கியமான காரணங்களும் உண்டு.

பிரேம பக்தர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடம் பக்தி கொண்டு அளவற்ற ஆனந்தம் அடைகின்றனர். இந்த பிரேமானந்தத்தின் ஒரு சிறு துளிக்கு, கோடிக்கணக்கான பிரம்மானந்த சாகரங்கள் கூட ஈடாகாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸ்ரீகிருஷ்ணர், அந்த பிரேமானந்தத்தைத் தானும் ரசித்து அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். மேலும், ஸ்ரீமதி ராதாராணி தன் மீது கொள்ளும் உத்தமனான பிரேம பாவத்தையும் தானே அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினார்.

பக்தி நிலைகள் மொத்தம் ஒன்பது படி நிலைகளைக் கொண்டவை:

1) சிரத்தை
2) சாது சங்கம்
3) பஜன கிரியை
4) அனர்த்த நிவ்ருத்தி
5) நிஷ்டை
6) ருசி
7) ஆசக்தி

8) பாவம்

9) பிரேமை

இவை மேன்மேலும் வளர்ந்து மகாபாவம் என்ற ஒரு உத்தம பக்தி நிலையை அடையும். இந்த நிலைகளை மாதுர்ய காதம்பினி என்ற நூல் அழகாக விவரிக்கிறது.

ஸ்ரீமதி ராதா ராணிக்கு மட்டுமே மகாபாவம் என்ற உத்தமமான பிரேம பக்தி நிலை உண்டு. இந்த பிரேம பக்தி நிலையின் இனிமையை ஸ்ரீகிருஷ்ணரால் முழுவதுமாக ரசிக்க முடியாது. அவரது பக்தர்கள் மட்டுமே முழுவதுமாக ரசிக்க முடியும். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர், பிரேம பக்தியின் இனிமையை தானே ரசிக்க ஆசைப்பட்டார். எனவே அவரே ஸ்ரீராதா ராணியின் பிரேமையை தன் இதயத்தில் பெற்று, ஸ்ரீராதா ராணியில் நிறத்தில் தோன்றினார். எனவே ஸ்ரீசைதன்ய மகாபிரபு, ஸ்ரீராதா ராணியின் மகாபாவத்துடன் தோன்றிய ஸ்ரீகிருஷ்ணரேயாகும்.

மேலும் ஸ்ரீகிருஷ்ணர், தானே தனக்கு பக்தனாக அவதாரம் செய்து, எப்படி தன் பக்தன் பக்தி ரசத்தை ருசிக்கிறான் என்பதை அறிய விரும்பினார். அது மட்டுமல்லாமல், அவ்வாறு அவதாரம் எடுத்தால் மட்டுமே உலக மக்களுக்கு ஒரு கிருஷ்ண பக்தன் எப்படி இருக்க வேண்டும் என்பதை நடை முறையில் விளக்க முடியும் என்று எண்ணி, அவர் தானே தனக்கு பக்தனாக அவதரித்தார்.

ஸ்ரீசைதன்ய மகா பிரபுவின் தோற்றத்துக்கு இன்னொரு காரணமும் உண்டு. கலியுக தர்மமான ஹரி நாம சங்கீர்த்தனத்தை தொடக்குவதற்காகவும் அவர் அவதரித்தார். ஹரி நாம சங்கீர்த்தனம் மட்டுமே ஒருவனுக்கு பிரேம பக்தியை அளிக்க முடியும். எனவே ஸ்ரீசைதன்ய மகா பிரபுவை பிரேம புருஷோத்தமர்

என்று அழைக்கிறார்கள். இந்த பிரேம பக்தியை, மரியாதை புருஷோத்தமரான ஸ்ரீராமரோ, லீல புருஷோத்தமரான ஸ்ரீகிருஷ்ணரோ நேரடியாக கொடுக்க முடியாது. ஆனால் பிரேம புருஷோத்தமரான ஸ்ரீசைதன்ய மகா பிரபுவினால் மட்டுமே கிருஷ்ண பிரேம பக்தியை கொடுக்க முடியும்.

# மகாபிரபுவின் நாம சங்கீர்த்தனம்

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு தன் தந்தையின் மறைவுக்குப் பின் வட இந்தியாவிலுள்ள கயா என்ற இடத்திற்குச் சென்றார். எந்த ஒரு பக்தனும் ஒரு ஆன்மீகக் குருவை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பக்தியின் உத்தம நிலையை அடைய முடியும் என்பதை எடுத்துக்காட்ட, ஈஸ்வர பூரி என்ற சன்னியாசியிடம் 1502-ம் ஆண்டு தீட்சை எடுத்துக் கொண்டார். அப்போதே அவர் தன் பண்டிதத்தை விட்டு விட்டு ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை ஜெபிப்பதிலும் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றிப் பாடுவதிலும் மட்டுமே ஈடுபட்டார். எப்போதும் ஆனந்தப்பெருக்கில் மூழ்கி ஆடியும் பாடியும், மகிழ்ந்தார். தன் பிறப்பிடமான நவதீபத்திற்குத் திரும்பிய போது ஹரி நாம சங்கீர்த்தனத்தைப் பரப்ப வேண்டி, ஒரு பள்ளியை ஆரம்பித்து தன் சகாக்களுடன் மகாமந்திரத்தைப் பாடியும் ஆடியும் மகிழ்ந்தார்.

மிகவும் உயர்ந்த பக்தி நிலையை அவர் அடைந்திருந்ததை அறிந்து வங்காளத்திலுள்ள அனைத்து வைஷ்ணவர்களும் அங்கே வந்து கூடினார்கள். அவர்களில் ஒருவரே ஸ்ரீநித்தியானந்த பிரபு. அப்போது தான் அவர் ஒரு புனித யாத்திரையிலிருந்து திரும்பி இருந்தார். ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரம். இதேபோல் ஸ்ரீநித்யானந்த பிரபு ஸ்ரீபலராமரின் அவதாரம். வைகுந்த லோகத்தில் ஆதிசேஷனாக இருப்பதும் இவரே. ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக லோகங்கள் அனைத்தையும் உண்டாக்கியவர் இவரே. எல்லா குருக்களுக்கும் மூல குரு ஸ்ரீநித்யானந்த பிரபு. அத்தனை ஹரி நாமங்களுக்கும்

சொத்து இந்த நித்யானந்த பிரபுவாகும். அவர்கள் இருவரும் சந்தித்த நிகழ்ச்சியை ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் மிக அழகாக வர்ணிக்கிறது.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஒவ்வொரு வைஷ்ணவரிடமும் , "என் சகாக்களே, நீங்கள் தெருத் தெருவாகச் சென்று ஒவ்வொரு வீட்டையும் தட்டுங்கள். அவர்களிடம் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்தும், பாடியும் புனிதமான வாழ்க்கையை வாழச் சொல்லுங்கள்" என்று அன்புக் கட்டளை இட்டார். எனவே ஸ்ரீசைதன்ய மகாபிரபுவே நமக்கு மகா மந்திரத்தை இலவசமாக வழங்கியவர். இந்த மகா மந்திரம் புதியதல்ல. கோலோகத்தில் ஆதியும் அந்தமுமின்றி எப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பதே இந்த மகா மந்திரம். வேத காலங்களில் இந்த மந்திரத்தை தீட்சை மூலம் மட்டுமே பெற முடியும். ஆனால் இந்த தன்ய கலியுகத்தில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு நமக்கு இலவசமாகவே கொடுத்திருக்கிறார். எனவே நாம் இன்று இந்த மந்திரத்தை ஜெபித்து ஆனந்தப் படுகிறோம் என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவும், ஸ்ரீநித்யானந்த பிரபுவுமே ஆகும். அவர் நமக்கு அளித்த மகாமந்திரம். இதுவே கலியுகத்தின் தாரக மந்திரம்:

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

இந்த கிருஷ்ண மந்திரத்தை பலர் தவறாக உச்சரித்ததையும் ஸ்ரீசைதன்ய மகா பிரபு திருத்தினார்.

# கொடியவர்களையும் மாற்றினார்

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஹரி நாம சங்கீர்த்தன இயக்கம் சுற்றிலும் எங்கும் பரவியது. அவர் ஜாதி, மதம், நிறம் எதைப்பற்றியும் பார்க்காமல் அனைவரையும் சங்கீர்த்தன இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார். ஒரு நாள் இவ்வாறு நித்தியானந்த பிரபு பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது அவரை ஜகாய், மதாய் என்ற இரண்டு குடிகாரர்கள் குடித்து உடைந்த பானையினால் தலையில் மிகப் பலமாகத் தாக்கினார்கள். நித்யானந்த பிரபுவின் தலையிலிருந்து இரத்தம் கொட்டியது.

இந்த சம்பவத்தை அறிந்த ஸ்ரீசைதன்ய மகாபிரபு உடனே அங்கு ஓடி வந்தார். இந்த கயவர்கள் இருவரையும் கொல்வதற்காக தன் சக்கராயுதத்தை அழைத்தார். இதைக் கண்ட நித்யானந்த பிரபு, தன் தலைக் காயத்திலிருந்து பெரிதளவு இரத்தம் பீறிட்ட போதிலும், ஸ்ரீசைதன்ய மகா பிரபுவைத் தடுத்து, 'நீவிர் இந்த கலியுகத்தில் அரக்கர்களைக் கொல்ல அவதரிக்கவில்லை. மாறாக அரக்கர்களையும் பக்தர்களாக மாற்றுவதற்காகவே வந்தீர். கயவர்களையும் திருத்தி, அவர்களை பாவங்களிலிருந்து விடுவிக்கவே நீவிர் இந்த அவதாரத்தில் வந்தீர். எனவே அவர்கள் இருவரிடமும் நீவிர் கருணை காட்ட வேண்டும்' என்று மன்றாடினார். இதைக் கேட்ட சைதன்ய மகாபிரபு சக்கராயுதத்தை திருப்பி அனுப்பினார். அவரது கருணயினால் அரக்கக் குணங்கள் கொண்ட ஜகாய், மதாய் இருவரும் அந்த இடத்திலேயே வைஷ்ணவர்களாக மாறி ஸ்ரீகிருஷ்ணரின்

நாமங்களைப் பாடி ஆடினார்கள்.

இவ்வாறாக, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் புகழ் எங்கும் பரவின. ஆனால் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் புகழைக் கேட்ட முஸ்லீம் அரசாங்கத்தின் தலைமை சட்ட அதிகாரியான சந்த்காசி என்பவனுக்கு எரிச்சலை ஊட்டியது. இனி எந்த பொது இடங்களிலும் நாம சங்கீர்த்தனம் செய்யக் கூடாது என தடை உத்தரவு விதித்தான். இதை ஸ்ரீசைதன்ய மகாபிரவு அறிந்ததும் வெகுண்டு எழுந்தார். அனைத்து பக்தர்களையும் சேர்த்துக் கொண்டு சந்த்காசியின் வீட்டை நோக்கிப் படையெடுத்தார். சந்த்காசியை சைதன்ய மகாபிரபு வாக்கு வாதத்தால் வென்றது மட்டுமின்றி, அவனை வைஷ்ணவனாகவும் மாற்றினார். பின்னர் அவன் தன் வாழ்நாள் முழுவதும் சைதன்ய மகாபிரபுவின் சிறந்த பக்தனாக இருந்தான். இதனால் மேன்மேலும் நூற்றுக்கணக்கான முகமதியர்கள் நாம சங்கீர்த்தனத்தைத் தழுவினார்கள்.

சில வருடங்களுக்குப் பின், தன் 24-வது வயதில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு சன்னியானம் மேற்கொண்டார். இதை நாம் முன்பே பார்த்தோம். தன் தாயார், மற்றும் அருமை மனைவி அனைவரையும் துறந்து, இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும், நாமசங்கீர்த்தனம் பரவ வேண்டும் என உறுதி கொண்டு அவர் சன்னியாசம் பூண்டார். தன் தாயாரின் வேண்டுதலின் படி ஜகன்னாத பூரியில் தன் நிரந்தரமான நாம சங்கீர்த்தன மடத்தையும் நிறுவினார்.

மாயாப்பூரியிலிருந்து ஜெகன்னாத பூரிக்குச் செல்ல சில நாட்களாகும். ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஜெகன்னாத பூரியில் மூர்த்திகளாக அமர்ந்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணரையும், ஸ்ரீபலராமரையும், ஸ்ரீமதி சுபத்ரா தேவியையும் கண்ட உடன்

பக்திப் பரவசத்தால் தரையில் வீழ்ந்து விட்டார். அப்போது அங்கு ஸ்ரீ சர்வ பௌம பட்டாச்சாரியார் என்பவர் தலைமை தர்ம கர்த்தாவாக இருந்தார். ஆனால் அவர் ஸ்ரீசங்கராச்சாரியாரின் மாயாவாத கொள்கையைப் படித்து அதில் ஊறியவர். ஒரு இளம் சன்னியாசி இந்த அளவு பக்தி பரவசம் அடைந்ததை அவர் பார்த்ததே இல்லை. எனவே அவரது சேவகர்களிடம் கூறி, சைதன்ய மகாபிரபுவை தன் வீட்டுக்கு அழைத்து வர வைத்தார்.

# மாயாவாதத்தைத் தோற்கடித்தார்

ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஒரு மாயாவாத சன்னியாசியிடம் சன்னியாசத்தைப் பெற முக்கியமான காரணம் மாயாவாதத்தை ஒழிப்பதற்காகவே என்பது பலருக்கு தெரியாது. அசுர குணம் உள்ளவர்களை பிரிப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீசதாசிவரிடம் 'அசத் சாஸ்திரம்' என்ற மாயாவாதத்தைப் போதிக்க வேண்டும் என்று உத்தரவு இட்டதால், அவர் கலியகத்தில் ஸ்ரீபாத் சங்கராச்சாரியாராக அவதரித்ததாக ஸ்ரீசைதன்ய சர்தாம்ருதத்தில் காண்கிறோம்.

மற்ற அனைத்து வைஷ்ணவர்களைப் போல் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவும் பகவானுக்கு ஆன்மீக உருவம் உண்டு என்றே உபதேசித்தார். ஆனால் ஜகன்னாத பூரியில் பகவானுக்கு உண்மையான உருவம் எதுவும் கிடையாது என்றும், உருவத்தால் வழிபடுவது இரண்டாம் தரமான வழிபாடு என்றும் நம்பியிருந்த மாயாவாதிகள் ஏராளமானோர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் ஸ்ரீசங்கராச்சாரியரைப் பின்பற்றியவர்கள். அவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர் சர்வ பௌம பட்டாச்சாரியார் என்பவர். அவர் சைதன்ய மகாபிரபுவை அழைத்து 7 நாட்கள் தொடர்ந்து தன் வீட்டில் வைத்து மாயவாதக் கொள்கைகளை உபதேசித்தார். ஆனால் அந்த 7 நாட்களும் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு எந்த ஒரு வினாவையும் எழுப்பவில்லை. அசையாமல் உட்கார்ந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

இதைக்கண்ட சர்வ பௌம பட்டாச்சாரியார், சைதன்ய மகாபிரபுவுக்கு எதுவும் விளங்கவில்லையோ என்று நினைத்தார்.

அதன் பின் 7-ஆவது நாள் தொடர்ந்த தர்க்கத்தில் மகாபிரபு சர்வ பௌம பட்டாச்சாரியாரை வென்றார். தோல்வியால் கவலை அடைந்த சர்வ பௌம பட்டாச்சாரியாருக்குத் தன் சுய உருவத்தை சத்புஜ தோற்றத்தில் காட்டினார்.

ஈஸ்வர பரமகிருஷ்ண:
சச்சிதானந்த விக்ரஹ:
அனாதிர் ஆதிர் கோவிந்த
சர்வ காரண காரணம் ... (பிரம்மசம்ஹிதை)

சர்வ பௌம பட்டாச்சாரியார் தன் மடமையான மாயாவாதக் கொள்கைகளை தூக்கி எறிந்தார். 'நான் கண்ட கண்ட நூல்களைப் படித்து இரும்பு மண்டையையே கொண்டிருக்கிறேன்' என அங்கலாய்ந்தார். அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் முழுவதுமாக சரணடைந்தார். பின் நூற்றுக் கணக்கான மாயாவாதிகளை, வைஷ்ணவர்களாக மாற்றினார்.

ஜகன்னாத பூரியில் இப்போதும் கூட சர்வ பௌம பட்டாச்சாரியாரின் அறை பத்திரமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்துக்களால் இது ஒரு புண்ணிய தலமாகக் கருதப்படுகிறது. அந்த அறையில் ஒரு பக்கம் ஸ்ரீ சைதன்ய மகா பிரபு தன்னை 'சத்புஜ உருவத்தில்' சர்வ பௌம பட்டாச்சாரியாருக்குக் காட்சி அளித்ததை வரைந்திருக்கிறார்கள். 'சத்புஜம் என்றால் ஆறு கைகள் என்று பொருள். இது ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவே, பரம இறைவன் என்றும், அவரே முன்பு துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணராகவும் திரேதா யுகத்தில் ஸ்ரீராமச்சந்திரராகவும் தோன்றினார் என்பதைக் குறிக்கிறது. மேலே பச்சை நிறத்துடன்

தோன்றும் இரு கரங்களும் ஸ்ரீராமரின் வில் அம்பு, ஆயுதங்களை ஏந்தியுள்ளன. நடுவில் நீல நிறமுடன் தோன்றும் இரு கரங்களும் ஸ்ரீகிருஷ்ணரின் புல்லாங் குழலைத் தாங்கியுள்ளன. கீழே தோன்றும் பொன்னிறமான இரு கரங்களும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கமண்டலத்தையும், சன்னியாசக் கம்பையும் தாங்கியுள்ளன.

# தென்னிந்திய யாத்திரை

சைதன்ய மகாபிரபு ஜகன்னாத பூரிக்கு வந்த சில மாதங்களிலேயே தென்னிந்தியாவிற்கு தீர்த்த யாத்திரைக்கு கிளம்பினார். ஸ்ரீசைதன்ய சரிதாமிருதம் அவரது அற்புதமான தீர்த்த யாத்திரையையும், லீலைகளையும் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது.

அவரது யாத்திரையின் போது குஷ்ட ரோகத்தால் பாதிக்கப் பட்ட வாசுதேவர் என்ற வைஷ்ணவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவைக் காண ஆசைப்பட்டார். ஆனால் தாமதமாக வந்ததால், ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை அவரால் பார்க்க முடியவில்லை. மிகவும் வருத்தப்பட்டு அழுது கொண்டிருந்தார். இதை ஏற்கனவே சில மைல்கள் தூரம் சென்றிருந்த ஸ்ரீசைதன்ய மகாபிரபு உணர்ந்தார். உடனேயே அவர் திரும்பி நடந்து வந்து வாசுதேவருக்கு தரிசனம் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், குஷ்ட ரோகத்தால் துர் நாற்றம் கொண்ட வாசுதேவரை எந்த விதமான அருவருப்பும் இன்றி எவ்வாறு தன் குழந்தையை ஒரு தாய் அரவணைப்பாளோ அதேபோல் ஸ்ரீசைதன்ய மகாபிரபு வாசுதேவரைக் கட்டி அணைத்தார். அந்த நிமிடமே வாசுதேவரின் குஷ்ட ரோகம் மறைந்தது. ஒரு அழகான இளம் உருவத்தைப் பெற்றார். ஹரி நாமத்தை அனைவருக்கும் வினியோகிக்க வேண்டும் என்று வாசுதேவருக்கு உத்தரவு இட்டு பின் ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் யாத்திரையைத் தொடர்ந்தார்..

அதன் பின் அவர் ஸ்ரீராமானந்தராயர் என்ற சிறந்த பக்தரை காணச் சென்றார். அரசியல், அரசாங்கம் மற்றும் உலக

சுகங்களை அனுபவிக்கத் துடிக்கும் ஜனங்களிடமும் இருந்து சன்னியாசிகள் பிரிந்தே இருக்க வேண்டும் என்பது சாஸ்திரம். ஆனால் ஸ்ரீராமானந்தராயர் அரசாங்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தும் ஒரு பெரும் பக்தராக விளங்கினார். அவரிடம் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி உரையாடியது மிகக் குறிப்பிடத் தக்கது. ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஸ்ரீராமானந்தராயரை எல்லாவற்றையும் விட்டு விட்டு ஜெகன்னாத பூரிக்கு வந்து வைஷ்ணவர்களுடன் சேர வேண்டும் எனக் கட்டளையிட்டார்.

அதன் பின் ஸ்ரீசைதன்ய மகாபிரபு இந்தியாவிலேயே மிகப் பெரிய கோயிலான ஸ்ரீரங்கத்திற்கு சென்றார். அப்போது சதுர்-மாஸ்யம் என்ற விரதத்தால் நான்கு மாதங்கள் அங்கு தங்கினார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் காலடித் தடங்களை நாம் இன்றும் ஸ்ரீரங்கத்தில் காணலாம். அதுமட்டுமின்றி, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் தென்னிந்திய பயணத்தின் போது அவர் சென்ற 108 இடங்களிலும் அவரது காலடித் தடங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீரங்கத்தில் வேங்கட பட்டர் என்ற வைஷ்ணவரின் வீட்டில் தங்கி ஸ்ரீரங்க நாதரை தினமும் தரிசித்தார். ஸ்ரீவேங்கட பட்டர் மற்றும் அனைத்து ஸ்ரீசம்பிரதாய வைஷ்ணவர்களிடமும் ஸ்ரீகிருஷ்ணரின் உத்தம நிலையப்பற்றி ஸ்ரீசைதன்ய மகாபிரபு பேசினார். “ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து வந்தவரே உங்கள் ஸ்ரீமன் நாராயணர். மேலும் உங்கள் ஸ்ரீமன் நாராயணரால் எந்த ஒரு கோபியரையும் கவர முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், உங்கள் மகாலட்சுமி ஸ்ரீகிருஷ்ணரின் ரஸ லீலையைப் பார்க்க வேண்டி பிருந்தாவனத்திற்கு வெளியே பேல்வனத்தில் தவம் செய்கிறாள். இன்னமும் மகாலட்சுமியினால் ஸ்ரீகிருஷ்ணரின் ரஸ லீலையைப்

பார்க்க முடியவில்லை” என்று நகைச்சுவையாகக் கூறி அவர்களுடைய தற்பெருமையைக் குறைத்ததாக ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் (மத்ய 9.151) கூறுகிறது. ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஏராளமானவர்களை அவரது நாமசங்கீர்த்தன இயக்கத்துக்கு கொண்டு வந்தார்.

அப்போது அங்கே சிறு பாலகனாக இருந்த கோபாலப் பட்டரிடம் அதிகம் நெருக்கம் கொண்டார். கோபாலப் பட்டர் தினமும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு பணிவிடை செய்தார். ஸ்ரீசைதன்ய மகாபிரபு கோபாலப் பட்டருக்கு ஸ்ரீகிருஷ்ணரே சுயம் பகவான் என்ற உண்மையையும் அவரது லீலைகளைப் பற்றியும் போதித்தார். முக்கியமாக ஸ்ரீலட்சுமி நாராயண பக்தி வழிபாட்டுக்கும் கோபியர்கள் சூழ்ந்த ஸ்ரீராதா கிருஷ்ண பக்தி வழிபாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கிக் கொடுத்தார். ஒரு தடவை கோபாலப் பட்டரைத் தன் மடியில் வைத்தவாறு, தானே அந்த ஸ்ரீகிருஷ்ணர் என்று தன் சொரூபத்தையும் காட்டினார்.

சதுர் மாதங்கள் என்ற நான்கு மாதங்களுக்குப் பின் ஸ்ரீசைதன்ய மகாபிரபு திரும்பவும் ஸ்ரீஜகன்னாத பூரிக்கு செல்ல ஆயத்தமானார். இதைக் கேட்ட கோபாலப் பட்டருக்கு தாங்க முடியாத வருத்தம். தானும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடன் வருவேன் என்று அடம் பிடித்தார். கோபாலப் பட்டரோ அப்போது சிறு பாலகன். எனவே ஸ்ரீசைதன்ய மகாபிரபு இன்னும் ஒரு மாதம் அங்கு தங்க சம்மதித்தார். மேலும் அவர் கோபாலப் பட்டரிடம், “நீ இங்கே தங்கி உன் தாய் தந்தையரைக் கவனித்துக் கொள். பின் அவர்களின் காலத்துக்குப் பின்னர் கண்டிப்பாக என்னிடம் நீ வருவாய்” என்று கூறி விடை பெற்றார். பின்னர் தன் பெற்றோர்கள்

காலம் ஆன பின்னர், கோபாலப் பட்டர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடன் சேர்ந்து கொண்டார். ஆறு கோஸ்வாமிகளில் ஒருவரான ஸ்ரீல கோபாலப் பட்ட கோஸ்வாமி இவரே. இவர் பிருந்தாவனத்தில் வழிபட்ட சாலக்கிராம சிலையிலிருந்து தானாகவே தோன்றிய விக்கிரமே ஸ்ரீராதா ரமணர். இந்த அதிசயமான விக்கிரகத்தை நாம் பிருந்தாவனத்தில் காணலாம்.

ஸ்ரீவேங்கட பட்டருக்கு ஸ்ரீபிரபோதானந்த சரஸ்வதி என்ற ஒரு சகோதரர் இருந்தார். சாஸ்திர ஞானத்தில் ஸ்ரீபிரபோதானந்த சரஸ்வதி மிகவும் பெயர் பெற்றவர். அவர் தான் கோபாலப் பட்டருக்கும் ஆசிரியராக இருந்தார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை சந்தித்ததால், ஸ்ரீபிரபோதானந்த சரஸ்வதியின் நாட்டம் இப்போது மகாபிரபுவிடம் சென்றது. மெதுவாக ஸ்ரீசம்பிரதாயத்திலிருந்து விலகி, முழுவதுமாக ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் சரணடைந்தார். பின் அவர் பிருந்தாவனத்துக்கு சென்று ஸ்ரீகிருஷ்ணர் காளிய நர்த்தனம் செய்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறு பஜன் குடிசையை அமைத்து ஸ்ரீகிருஷ்ண வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் தங்கியிருந்த இடத்தை நாம் இப்போதும் பிருந்தாவனத்தில் காணலாம்.

பிருந்தாவனத்தில் தங்கியிருந்த போது, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் அனுக்கிரகத்தால் ஸ்ரீபிரபோதானந்த சரஸ்வதி பல நூல்களை எழுதினார். அவற்றுள் மிகப் பிரசித்தி பெற்ற நூல்கள் இவை:

(1) விவேக சாதகம்

(2) ஸ்ரீபிருந்தாவன மகிமாம்ருதம்

(3) ஸ்ரீராதா ரஸ சுதா நிதி

ஸ்ரீசைதன்ய மகாபிரபு பின் 'கேப் காமரின்' என்று அழைக்கப்படும் கன்னியாகுமரிக்கும் விஜயம் செய்து அங்கே குமரி பகவதியம்மன் கோவிலுக்கும் சென்றார். உண்மையில் கன்னியாகுமரி பாறையில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கே சிலை வைத்திருக்க வேண்டும். நம் கோகுல் பவன் கன்னியாகுமரி ஆலயம், அவர் நடந்து சென்ற பாதையில் அமைந்துள்ளது.

அதன் பின் தென் இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள திருவட்டாறு என்ற புனித தலத்திலிருக்கும் ஆதிகேசவப் பெருமாளின் கோயிலுக்குச் சென்றார். பிரம்ம தேவர் இந்த உலகத்தை சிருஷ்டிக்கும் போது, அவருக்கு வேண்டிய அறிவை ஸ்ரீகிருஷ்ணர் கொடுத்தார். அப்போது பிரம்ம தேவர் ஸ்ரீகிருஷ்ணரைத் துதித்து எழுதிய பாசுரங்கள் தான் பிரம்ம சம்கிதை என்ற நூல். அந்த மூல நூல் மொத்தம் 100 அத்தியாயங்களைக் கொண்டது. ஆனால் ஐந்தாம் அத்தியாயம் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. மற்ற 99 அத்தியாயங்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு இந்தக் கோவிலில் தங்கி இருக்கும் போது, அங்கே ஒரு பக்தர் ஏட்டில் எழுதப்பட்ட பிரம்ம சம்கிதையின் ஐந்தாவது அத்தியாயத்தை ஆதி கேசவப் பெருமாளின் முன் உட்கார்ந்து படிப்பதைக் கண்டு மிகவும் ஆனந்தம் கொண்டார். அந்த ஏட்டு சுவடிகளை நகல்களாக எடுத்துக் கொண்டு, பேரானந்தத்துடன் கிளம்பினார். இந்த பிரம்ம சம்கிதை வைஷ்ணவர்களுக்கு மிகவும் முக்கியமான நூலாகும். இதன் முதல் சுலோகமே ஸ்ரீகிருஷ்ணர் மட்டும் தான் ஆதி புருஷர் என்று ஆரம்பித்து, அவரது வியாபகங்களையும், அனைத்து லோகங்களின் உண்மைகளையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு, தன் தென்னிந்திய யாத்திரைக்குப் பின் ஸ்ரீமத்வாச்சாரியார் வசித்த உடுப்பி என்ற புனித தலத்துக்குச் சென்றார். இங்குள்ள கோவிலில் இருக்கும் ஸ்ரீகிருஷ்ணர் மத்வாச்சாரியாருக்கு கனவில் தரிசனம் கொடுத்தவர். ஸ்ரீமத்வாச்சாரியாருக்குக் கிடைத்த ஒரு பெரிய கோபி சந்தனக்கட்டியின் உள்ளிருந்து வந்தவர். ஸ்ரீகிருஷ்ணரின் விக்கிரகத்தின் முன் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஆனந்தமாக பாடி ஆடினார்.

உடுப்பியில் வாழ்ந்து வந்த வைஷ்ணவர்கள் வழக்கமாக, தினமும் யக்ஞம் செய்வார்கள். மேலும் அவர்கள் அனைவரும் தற்பெருமை பிடித்த தத்துவ வாதிகளாக இருந்தனர். ஸ்ரீசைதன்ய மகாபிரபு அவர்களிடம் வாதாடினார். ஹரி நாம சங்கீர்த்தனம் மட்டுமே கலியுகத்தின் உத்தமமான ஒரே தர்மம் என்ற உண்மையை உணர்த்தினார். தத்துவ வாதிகளின் தற்பெருமையை ஸ்ரீசைதன்ய மகாபிரபு சுக்கு நூறாக உடைத்தார் என்று ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் (மத்ய 9.278) படிக்கிறோம். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் இந்த உடுப்பி விஜயம், தற்போதுள்ள பெரும்பாலான ஸ்ரீமத்வ சம்பிரதாய வைஷ்ணவர்களுக்கு தெரியாது.

பின்னர் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஜெகன்னாத பூரிக்குத் திரும்பினார்.

# பூரி ஜகன்னாதரின் ரத யாத்திரை

அவரது இரண்டு வருட தென்னிந்திய யாத்திரைக்குப் பின் அவருக்கு வயது 27-க்கும் மேல் ஆகியிருந்தது. ஆயிரக்கணக்கான பௌத்தர்களையும், ஜைனர்களையும், ஸ்ரீசங்கராச்சாரியாரை பின்பற்றிய மாயாவாதிகளையும் நாம சங்கீர்த்தனத்திற்கு மாற்றியிருந்தார். அப்போது ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் புகழ் இந்தியா முழுவதும் பரவி இருந்தது. ஜெகன்னாத பூரியை அப்போது ஆண்டு வந்த மன்னரும் நாம சங்கீர்த்தன இயக்கத்தில் சேர்ந்தார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவினால் ஜகன்னாத பூரியின் ரத யாத்திரை மேன் மேலும் பிரசித்தி பெற்றது.

ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பிரம்மாண்டமான ரதங்களை இழுத்துக் கொண்டாடினார்கள். அப்போது ஸ்ரீசைதன்ய மகாபிரபு பற்பல அற்புதங்களையும் லீலைகளையும் நிகழ்த்தினார். ஒரு சமயம் மூன்று ரதங்களும் மலை போல் அசையாமல் அப்படியே ஒரு இடத்தில் நின்று விட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் இழுத்தும் ரதங்கள் நகரவே இல்லை. இதைக் கண்ட ஜெகன்னாத பூரி மன்னர் எத்தனையோ பலம் கொண்ட மல்யுத்தம் செய்யும் வீரர்களை ஏவியும் கூட ரதங்களை அசைக்க முடியவில்லை. இந்த நிலையைப் பார்த்த ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் தலையைக் கொடுத்து தள்ளினார். உடனே ரதங்கள் கடகடவென்று சுலபமாக வேறு எந்த முயற்சியுமின்றி ஓட ஆரம்பித்தன.

தென்னிந்திய யாத்திரைக்குப் பின் ஸ்ரீசைதன்ய மகாபிரபு

மேற்கே பிருந்தாவனத்திற்குச் சென்று, அங்கே அழிந்து கிடந்த புண்ணிய தலங்களைத் துலக்கும் வேலையில் இறங்கினார். ஸ்ரீகிருஷ்ணரான தான் முன்பு பிறந்து தவழ்ந்து லீலைகள் புரிந்த இடம் அனைத்தும் அழிந்து கவனிப்பாரின்றி தூர்ந்து கிடந்தன. பிருந்தாவனத்திற்கு மீண்டும் உயிரளித்த பெருமை அவரையும் அவருடைய ஆறு கோஸ்வாமிகளையும் மட்டுமே சாரும்.

அவர் பிருந்தாவனத்திற்குச் செல்லும் வழியில் எப்போதும் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களைக் கூறி பாடியும், ஆடியும் நடக்கும் போது காடுகளில் உள்ள சிங்கங்கள், புலிகள், குரங்குகள் அனைத்தும் அவருடன் நடனமாடின. ஜரிகண்டா என்ற வனத்தில் நடந்த அந்த அதிசயத்தை ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதம் நமக்குக் கூறுகிறது. இப்படி பற்பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு, பிருந்தாவனத்தை அடைந்தார்.

# பிருந்தாவனமும் கோஸ்வாமிகளும்

பிருந்தாவனத்தில் சைதன்ய மகாபிரபு எப்போதும் பக்தி பரவசத்தில் மிதந்து கொண்டு இருந்தார். ஸ்ரீகிருஷ்ணர் அற்புதங்கள் நடத்திய அனைத்து இடங்களிலும் கண்ணீர் விட்டுக் கதறினார். புனித பிருந்தாவன மண்ணிலும், பாறைகளிலும் தன் உடலால் உருண்டார். பரவசத்தால் பாடினார், ஆடினார்.

ஸ்ரீகிருஷ்ணர் லீலைகள் புரிந்த நூற்றுக்கணக்கான புண்ணிய தலங்களைத் துலக்கி பின் அனைத்து இடங்களிலும் கோயில்கள் கட்ட வைத்தார். அந்தப் பொறுப்பை தன் ஆறு கோஸ்வாமிகளிடம் ஒப்படைத்தார். அவ்வாறு கட்டப்பட்ட கோவில்களில் ஒன்று தான் புகழ்பெற்ற ஸ்ரீராதா மதன் மோகன் ஆலயம். இதை சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீசனாதன கோஸ்வாமி கட்டினார்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு, தனது நேரடி சீடர்களான ஆறு கோஸ்வாமிகளை, ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகள் நடந்த இடங்களை துலக்க வைத்தது மட்டுமன்றி பக்தி யோகத்தைப் பற்றிய பெரும் பொக்கிஷமான அற்புத சாஸ்திரங்களையும் ஆன்மீக லோகங்களிலிருந்து திரும்பவும் கொண்டு வர வைத்தார்.

ஆறு கோஸ்வாமிகளும் எந்த விதமான ஜாதி, மத, நிற வேறுபாடுகளின்றி எல்லோரையும் நாம சங்கீர்த்தன மார்க்கத்தில் ஏற்றுக்கொண்டனர். ஆறு கோஸ்வாமிகளில் ஸ்ரீரூப கோஸ்வாமியும், ஸ்ரீசனாதன கோஸ்வாமியும் முஸ்லீம் அரசாங்கத்தில் மந்திரிகளாக இருந்தவர்கள். ஸ்ரீரகுநாத கோஸ்வாமியும், ஸ்ரீகோபாலப் பட்ட கோஸ்வாமியும் இளம்

பருவத்திலேயே சைதன்ய மகாபிரவிடம் சேர்ந்தவர்கள். ஸ்ரீரகுநாத தாஸ கோஸ்வாமி பெரும் செல்வந்தராக பிறந்திருந்தும் இளம் வயதிலேயே ஆன்மீகத்தில் மிகவும் ஈடுபட்டு, சிறிதளவு மோரை மட்டுமே அருந்தி, இரண்டு மணி நேரம் மட்டுமே தூங்கி தன் அனைத்து பொழுதையும் ஹரி நாமம் ஜெபிப்பதிலும், ஸ்ரீராதா கிருஷ்ண சேவையிலும் அற்பணித்தவர்.

ஆறு கோஸ்வாமிகளிலும் மிகவும் இளையவர் ஸ்ரீஜீவ கோஸ்வாமி. அவர் ஸ்ரீசனாதன கோஸ்வாமியின் மருமகன். வைஷ்ணவ சித்தாந்தத்தில் பற்பல புகழ் வாய்ந்த நூல்களைப் படைத்தவர். இந்தியச் சரித்திரத்திலேயே மிகப் பெரிய அறிஞர்களில் ஒருவர் இவர்.

# மாயாவாதிகளை வென்றார்

பிருந்தாவனத்தை துலக்கிய பின் மகாபிரபு, மாயாவாதிகளின் தலை நகரம் போல் விளங்கும் பனாரஸ் என்ற நகரத்தை நோக்கிச் சென்றார். மிகச் சக்தி வாய்ந்த மாயாவாதிகள் அங்கு பெருமளவில் இருந்தனர். ஸ்ரீசைதன்ய மகாபிரபு எப்போதும் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்தும் ஆடியும், பாடியும் கொண்டிருந்ததை அவர்கள் பலமாக எதிர்த்தனர்.

அவர்கள், 'ஒரு சன்னியாசியின் செயல் இதுவல்ல. மற்ற சன்னியாசிகளைப் போல் ஏன் உட்கார்ந்து தியானம் செய்வதில்லை?" என்று கேட்டனர். அதற்கு சைதன்ய மகாபிரபு அடக்கத்துடன் பதிலளித்தார்: "இந்த கடினமான சாஸ்திரங்களையெல்லாம் படிப்பதற்கு எனக்கு அறிவு போதாது. நான் ஒரு முட்டாள். என் குருநாதர் என்னிடம், 'நீ வேறொன்றுக்கும் உதவ மாட்டாய். இந்த நாம சங்கீர்த்தனத்தை மட்டும் செய்' என்று கட்டளையிட்டார். இந்த நாம சங்கீர்த்தனத்தால் அனைத்து சாஸ்திரங்களையும் படிப்பதால் கிடைக்கும் பலனை நான் பெற்று விட்டேன்" என்று கூறினார்.

இப்படித் தொடங்கி, பின்னர் ஸ்ரீசைதன்ய மகாபிரபு அனைத்து மாயாவாதிகளையும் வென்றார். மாயாவாதிகள் ஆயிரக்கணக்கானோர் நாம சங்கீர்த்தன இயக்கத்திற்கு மாறினார்கள். அவரது 31-வது வயதில் திரும்பவும் ஜகன்னாத பூரிக்குத் திரும்பினார். பின்னர் சுமார் 18 வருடங்களாக ஸ்ரீராமானந்தராயர், ஸ்ரீசர்வபௌம பட்டாச்சாரியார் மற்றும்

நெருங்கிய பக்தர்களுடன் வாழ்ந்து வந்தார். அவர் அங்கு தங்கிய இடம் இப்போதும் உள்ளது. அதன் பெயர் 'கம்பீரா'. இங்கு ஸ்ரீசைதன்ய மகாபிரபு உபயோகித்த காலணிகளையும், கமண்டலத்தையும் இப்போதும் கூட நாம் அங்கு காணலாம்.

# நாம ஆச்சார்யார் ஸ்ரீல ஹரிதாஸ தாக்கூரா

ஸ்ரீஜெகன்னாத பூரியில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் மிகவும் நெருங்கிய பக்தர் ஸ்ரீஹரிதாஸ தாக்கூரா. அவர் ஒரு முஸ்லீம் குடும்பத்தில் பிறந்திருந்தும் ஹரிநாமத்தை ஜெபிப்பதில் அளவில்லாத ஆனந்தம் கொண்டவர். நாம ஆச்சாரியார் என்று இப்போது அனைத்து வைஷ்ணவர்களாலும் அழைக்கப்படுபவர். தினமும் 20 மணி நேரம் தவறாது ஹரி நாமம் ஜெபித்தார்.

ஒரு சமயம் பொறாமை கொண்ட முஸ்லீம்கள் அவரை 22 பொதுச்சந்தைகளில் கட்டி, அடித்து சித்திரவதை செய்தனர். அந்த சித்திரவதைகளிலும் கூட இடை விடாது ஸ்ரீகிருஷ்ணரின் நாமத்தை ஜெபித்துக் கொண்டே இருந்தார். சாதாரணமானவர்கள் இந்த கொடிய தண்டனையில் முதல் சந்தையிலேயே இறந்து போவார்கள். ஆனால் அவருக்கோ எந்த விதமான வேதனையும் தெரியவில்லை.

இன்னொரு தடவை ஸ்ரீஹரிதாஸ தாக்கூராவின் புகழில் பொறாமை கொண்ட ஒரு செல்வந்தன், ஒரு விலைமாதுவை ஸ்ரீஹரிதாஸ தாக்கூராவைக் கெடுக்க வேண்டி அனுப்பினான். ஆனால் நடந்தது என்ன? பதிலாக அந்த விலைமாது ஸ்ரீஹரிதாஸ தாக்கூராவின் காலடியில் விழுந்து மன்னிப்பு கேட்டதோடு மட்டுமின்றி அவரிடம் தீட்சை பெற்று ஹரி நாமத்தை இடைவிடாது ஜெபிக்கும் பக்தை ஆனாள்.

ஸ்ரீஜெகன்னாத பூரியில் ஸ்ரீஹரிதாஸ தாக்கூராவின் சமாதி கோவில் ஒரு முக்கியமான புண்ணிய தலமாகும். அது சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. மேலும் ஸ்ரீஹரி தாஸ

தாக்கூரா உடலை விட்டுப் போகும் போது ஸ்ரீசைதன்ய மகாபிரபுவே தன் கைகளால் சமாதி கிரியைகள் செய்தார்.

# ஸ்ரீராதா கிருஷ்ண லீலைகளில் புகுந்தார்

ஸ்ரீஜெகன்னாத பூரியில், பக்த அவதாரமான ஸ்ரீசைதன்ய மகாபிரபு, பிரேம பக்தர்கள் காண்பதைப் போல் பற்பல அற்புதமான கோலோகக் காட்சிகளைக் கண்டார். எப்போதும் அவர் பக்தி நிலையின் சிகரமான அனுபவங்களில் மூழ்கி இருந்தார். அதுமட்டுமல்ல, பிரேம பக்தர்களைப் போல் அவர் அந்த காட்சிகளில் நேரடியாக பங்கும் கொள்வார்.

ஒரு சமயம் கடற்கரை மணல் மேட்டினை பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணர் மாடு மேய்த்த கோவர்த்தன மலையாகவும், தூரத்தில் தெரிந்த பசுமை நிறமான மலைகளை பிருந்தாவனக் காடுகளாகவும், அதில் ஸ்ரீகிருஷ்ணர் நடந்து செல்வதையும் கண்டார். பக்கம் சென்று பார்க்க வேண்டி பித்துப் பிடித்தது போல் அதை நோக்கி ஓடினார். பிரேமையினால் மணல் மேட்டில் மயங்கி விழுந்தார்.

பக்தர்கள் சூழ்ந்து நின்று செய்வதறியாது திகைத்தனர். ஸ்ரீசைதன்ய மகாபிரபு, ஸ்ரீகிருஷ்ணரின் லீலையில் புகுந்தார். பிருந்தாவனக் காட்டினுள் ஒரு குகைக்குள் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீமதி ராதாராணியுடன் செல்லும் அற்புதமான காட்சியைக் கண்டார். அது மட்டுமல்ல, அந்தத் தெய்வீகத் தம்பதிகளை சுற்றியிருந்த கோபியர்கள் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை பூக்கள் பறித்துக் கொடுக்குமாறும் கேட்டனர்.

சூழ்ந்திருந்த பக்தர்கள் உரத்த குரலில் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தனர். அப்போது ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் சுய நினைவுக்கு வந்து விட்டார். காட்சி மறைந்து விட்டது. சுய

நினைவுக்கு ஏன் வந்தோம் என்று அங்கலாய்த்து கதறி அழுதார். ஒரு பிரேம பக்தன் இவ்வாறு தான் இருப்பான் என்பதை நமக்கு உணர்த்தினார்.

ஶ்ரீசைதன்ய மகாபிரபு ஒரு சமயம் பூரி ஜகன்னாதர் ஆலயத்துக்கு அருகிலுள்ள கடற்கரை ஓரம் நடந்து செல்லும் போது, திடீரென்று ஒரு இடத்தில் தன் கைகளால் தோண்டினார். அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில், ஒரு அழகான ஶ்ரீகிருஷ்ண விக்கிரகம் தோன்றியது. இந்த விக்கிரகம், முன்பு பிரம்ம தேவர் வழிபட்ட விக்கிரகம் என்று ஶ்ரீசைதன்ய மகாபிரபு கூறினார்.

இந்த விக்கிரகம் தற்போது தோட்ட கோபிநாத் என்ற பெயரில் இன்றும் ஜகன்னாத பூரியில் உள்ளது. இந்த கோயிலை ஶ்ரீகதாதர பண்டிதர் பராமரித்து பூஜைகள் செய்து வந்தார். ஶ்ரீசைதன்ய மகாபிரபு தன் லீலைகளை முடித்து, தன் ஸ்வேதத்வீபத்திற்கு திரும்பிப் போகும் போது, இதே விக்கிரகத்தில் புகுந்து மறைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# மகாபிரபுவின் அற்புதமான மறைவு

ஸ்ரீசைதன்ய மகாபிரபு, 1534-ம் வருடம் தோட்ட கோபிநாத் என்ற ஆலயத்தில் ஹரிநாம சங்கீர்த்தனம் நடத்திக் கொண்டிருக்கும் போது அதிசயமாக அந்த விக்கிரகத்தினுள் புகுந்து மறைந்தார். அவர் தன் உடலை இந்த பூலோகத்தில் விடவில்லை. ஸ்ரீசைதன்ய மகாபிரபு இவ்வாறு அதிசயமாக மறைந்த அதே சமயம், கோபிநாத் விக்கிரத்தில், ஸ்ரீகிருஷ்ணரின் தொடைப்பாகத்தில் ஒரு கீறல் தோன்றியது. இந்த ஒரே ஒரு அடையாளம் தான் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் மறைவுக்கு ஆதாரம்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றிய மாயாப்பூரில் 18-ம் நூற்றாண்டின் கடைசியில் ஸ்ரீபக்தி வினோத தாக்கூர் ஒரு நினைவு ஆலயத்தைக் கட்டினார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பரம்பரையில் வந்த ஸ்ரீபக்தி வினோத தாக்கூராவை ஏழாவது கோஸ்வாமி என்றே வைஷ்ணவர்கள் கருதுகின்றனர். அவர் கட்டிய இந்த ஆலயம் மாயாப்பூர் பிரஜ மண்டலமாகக் கருதப்படுகிறது. ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஹரிநாமத்தை அடிப்படையாகக் கொண்ட பக்தி இயக்கத்தினை வெளி நாடுகளுக்குக் கொண்டு செல்லத் தூண்டியவர் பக்தி வினோத தாக்கூராவின் வழியில் வந்த, அவரது சொந்த மகனுமான ஸ்ரீபக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூரா ஆவார். பின்பு ஸ்ரீபக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூராவிடம் தீட்சையையும், ஸ்ரீபக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமிடம் சன்னியாசத்தையும் பெற்ற ஸ்ரீபக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பக்தி

சித்தாந்தங்களை வெளி நாடுகளில் பரப்பினார். இஸ்கான் என்ற சங்கீர்த்தன மார்க்கத்தினையும் ஸ்தாபித்தார்.

ஸ்ரீபக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதாவைத் தொடர்ந்து, அவரது கட்டளையின் படி பக்தி வேதாந்த நாராயண மகாராஜா உலகெங்கும் சென்று பக்த கோடிகளுக்கு உதவி செய்து வந்தார். ஸ்ரீபக்தி வேதாந்த சுவாமி பிரப பாதரின் பிரிய-பந்து மட்டுமின்றி அவருக்கு எல்லாவிதங்களிலும் பக்க பலமாகவும் உதவியாகவும் இருந்தவரும் அவரே. உலகத்தின் எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கீர்த்தனங்கள் கேட்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு சாதி, மதம், மொழி, தேசம், போன்ற எவ்வித வித்தியாசமுமின்றி அனைவரையும் அன்புடன் அரவணைத்து வந்தவர் ஸ்ரீபக்தி வேதாந்த நாராயண மகாராஜா அவர்கள்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றிய மாயாப்பூரில் ஒவ்வொரு வருடமும் உலகம் எங்கும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். வைஷ்ணவ திலகங்களை அணிந்து கொண்டு ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். 500 வருடங்களுக்கு முன்பு அவர் எவ்வாறு ஆடியும், பாடியும் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு நாமங்களை சங்கீர்த்தனம் செய்தாரோ, அதே போல் தான் இப்போதும் அவரது பக்தர்கள் ஆடி பாடுகின்றனர்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கும் அவரது பக்தி மார்க்கம் ஏராளமானவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது. கௌடிய வைஷ்ணவம் உலகெங்கிலும் பிரசித்தி பெற்றுள்ளது மட்டுமின்றி, வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. பற்பல புது சேவாலயங்களும் பக்தி மார்க்க

நூல்களும் பெருகிக் கொண்டே வருகின்றன. இந்தக் கலியுகத்தில் ஹரி நாம சங்கீர்த்தனம் மட்டுமே முக்தியைக் கொடுக்க முடியும் என்பது சாஸ்திரம்

ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்தி ஏவ நாஸ்தி
ஏவ நாஸ்தி கதிர் அன்யதா ... (பிருகத் நாரதீய புராணம்)

எனவே ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை எப்போதும் ஜெபித்தும் ஆடியும், பாடியும் மகிழ்வோம்.

# பஞ்ச தத்துவங்கள்

ஸ்ரீகௌரங்கா என்று அழைக்கப்படும் ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றிய போது, அவருடன் அவரது சாகாக்கள் பலரும் தோன்றினார்கள். கோலோக பிருந்தாவனத்திலிருந்து ஏராளமான மஞ்சரிகள் (ஸ்ரீமதி ராதா ராணியின் பணிப்பெண்கள்), சில கோபியர்கள், கோபர்கள், மற்றும் வைகுந்த லோகங்களின் மேல் பகுதியான மதுரா, துவாரகா லோகங்களிலிருந்து பலரும் மகாபிரபுவுடன் அவதரித்தார்கள். வைகுந்தம் மற்றும் சாகேத் போன்ற லோகங்களிலிருந்தும் கூட சிலர் தோன்றினார்கள்.

அத்தகையோரில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடன் தோன்றிய நால்வர் மிகவும் முக்கியமானவர்கள். ஸ்ரீநித்தியானந்த பிரபு, ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார், ஸ்ரீகதாதர பண்டிதர், ஸ்ரீவாசர் என்பவர்களே அவர்கள். இவர்கள் ஐவரையும் சேர்த்து பஞ்ச தத்துவம் என்று கூறுவார்கள். ஒவ்வொருவரும் ஒரு தத்துவத்திற்கு பொறுப்பான பிரதிநிதிகள்:

(1) ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாபிரபு - பகவான் ஸ்ரீகிருஷ்ண தத்துவம்

(2) ஸ்ரீநித்தியானந்த பிரபு - குரு தத்துவம் (ஆதி குரு)

(3) ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார் - ஹரி-ஹர தத்துவம் (மகாவிஷ்ணு + சதாசிவர்)

(4) ஸ்ரீகதாதர பண்டிதர் - சக்தி தத்துவம் (ஸ்ரீராதா ராணியின் விரிவங்கம்)

(5) ஸ்ரீவாசா பண்டிதர் - சுத்த பக்த ஜீவ தத்துவம் (நாரத முனிவர்)

நாம் மகா மந்திரத்தை ஜெபிக்கும் முன், இந்த பஞ்ச தத்துவ மந்திரத்தை முதலில் உச்சரிக்க வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய பிரபு நித்யானந்த
ஸ்ரீஅத்வைத கதாதர ஸ்ரீவாஸாதி கௌர பக்த விருந்த

"ஸ்ரீகிருஷ்ண சைதன்ய" என்பது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பக்த அவதாரமாக வந்த ஸ்ரீசைதன்ய மகாபிரபு. அவரைப் பற்றி நாம் விரிவாகப் பார்த்தோம். இனி மற்ற நான்கு பேரைப் பற்றி சிறிது அறிவோம்.

# ஸ்ரீநித்தியானந்த பிரபு

சுயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் முதலாவது விரிவங்கம் ஸ்ரீபலதேவ பிரபு ஆவார். அவரே ஸ்ரீநித்தியானந்த பிரபுவாக ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடன் 1474 (AD) ஆம் வருடம் அவதரித்தார். அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபு அவதரித்த நவத்வீபத்திலிருந்து சிறிது தூரத்தில் உள்ள ஏக-சக்கரம் என்ற கிராமத்தில் தோன்றினார்.

இந்த ஊருக்கு ஏக-சக்கரம் என்று பெயர் வர ஒரு சரித்திரம் உண்டு. பாரதப் போரில், ஸ்ரீகிருஷ்ணர் எந்த ஆயுதத்தையும் தாங்க மாட்டேன் என்று உறுதி எடுத்திருந்தாலும், பீஷ்ம தேவரால் தன் பக்தனான அர்ஜுனனுக்கு ஆபத்து வருவதை பார்த்ததும் பக்கத்தில் கழன்று கிடந்த ரதத்தின் ஒரு சக்கரத்தை தூக்கிக் கொண்டு பீஷ்மரைக் கொல்வதற்காக கோபத்துடன் ஓடினார். ஆனால் இதைக் கண்ட பீஷ்ம தேவர் ஸ்ரீகிருஷ்ணரைத் துதிக்க ஆரம்பித்தார். இதைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணருக்கு கோபம் மறைந்து விட்டது. எனவே அந்த சக்கரத்தை வானத்தில் தூக்கி எறிந்தார். ஸ்ரீகிருஷ்ணரின் அளவற்ற சக்தியினால், சக்கரம் வெகு நேரம் பறந்து சென்று, கடைசியில் இந்த ஏக-சக்கரம் என்ற கிராமத்தில் விழுந்தது. அது விழுந்த இடத்தை இன்றும் நாம் காணலாம்.

ஸ்ரீநித்தியானந்த பிரபுவின் தந்தையின் பெயர் ஸ்ரீகதாய் பண்டிதர். தாயாரின் பெயர் பத்மாவதி தேவி. ஸ்ரீநித்தியானந்த பிரபு பிறக்கும் போது, ஸ்ரீகதாய் பண்டிதர்

வணங்கிய மௌரேஸ்வரர் என்ற சிவன் கோயிலிலிருந்து பெரும் சத்தம் வந்து கொண்டிருந்ததை பல பக்தர்களும், குறிப்பாக முன்னரே தோன்றிய ஸ்ரீஅத்வைத ஆச்சாரியாரும் கேட்டனர். ஒரு அவதூத மகா புருஷர் பிறந்திருக்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

சில வருடங்களுக்குப் பின், ஸ்ரீகதாய் பண்டிதருக்கும் பத்மாவதி தேவிக்கும் இன்னொரு குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு அவர்கள் பங்க-ராயர் என்று பெயர் வைத்திருந்தனர். அந்த குழந்தை உண்மையில் ஸ்ரீகிருஷ்ணரே. பலராமரான ஸ்ரீநித்தியானந்த பிரபுவுக்கு தம்பியாக பிறக்க வேண்டும் என அவதரித்தவர். ஆனால் சில வருடங்களில் அவர் மாயமாக மறைந்து போனார். அப்போது மிகவும் கவலையடைந்த பெற்றோர்களுக்கு அசரீரி மூலமாக தான் ஸ்ரீகிருஷ்ணரே என்றும், வரும் ஏகாதசி அன்று பக்கத்திலுள்ள ஒரு ஆற்றில் தான் விக்கிரக வடிவமாக மிதந்து வருவதாகவும் கூறினார். அதே போல ஏகாதசி அன்று பக்கத்திலுள்ள ஆற்றில் ஒரு விக்கிரகமாக மிதந்து வந்தார். இந்த ஆற்றை யமுனை ஆறு என்று அழைக்கிறார்கள். பங்க-ராயர் என்ற இந்த விக்கிரகத்தை இப்போதும் நாம் வீரசந்திரபூர் என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு கோவிலில் காணலாம்.

சில வருடங்களுக்குப் பின் சங்கராரண்ய பூரி என்ற ஒரு சன்னியாசி ஸ்ரீநித்தியானந்த பிரபு பிறந்த வீட்டின்

பக்கம் ஒரு மரத்தடியின் கீழ் பல நாட்கள் தங்கியிருந்தார். அவருக்கு ஸ்ரீகதாய் பண்டிதர், பத்மாவதி தேவி இருவரும் நன்கு பணிவிடை செய்தனர். ஒரு நாள் சங்கராரண்ய பூரி, ஸ்ரீகதாய் பண்டிதரிடமும் பத்மாவதி தேவியிடமும் தனக்கு ஒர் உதவி செய்யுமாறு வேண்டினார். கண்டிப்பாக உதவி செய்வேன் என்று வாக்கு கொடுத்தால் மட்டும் தான் அந்த உதவியைக் கேட்பதாகவும் கூறினார்.

வாக்கு கொடுத்த தம்பதிகளிடம், அவர்களின் ஒரே மகனான ஸ்ரீநித்தியானந்த பிரபுவை தனக்கு தானமாக தர வேண்டும் என்று கேட்டார். அதிர்ச்சியடைந்த தம்பதிகளுக்கு வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. ஸ்ரீநித்தியானந்த பிரபுவை பறிகொடுத்த பெற்றோர்களின் கவலைக்கு அளவில்லை. இந்தக் கவலையினால் ஸ்ரீகதாய் பண்டிதரும் பத்மாவதி தேவியும் சீக்கிரத்திலேயே இறந்து போனார்கள்.

இந்த சங்கராரண்ய பூரி என்பவர் வேறு யாருமல்ல; ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு முன்னர் பிறந்து சீக்கிரமே சன்னியாசம் மேற்கொண்டு வீட்டை விட்டு சென்ற விஸ்வரூபர் தான். இந்த விஸ்வரூபர் தான் மூல சங்கர்ஷணர். சில வருடங்களுக்குப் பின், விஸ்வரூபர் ஸ்ரீநித்தியானந்த பிரபுவின் ஆன்மீக உடலில் ஐக்கியமாகி, தன் உடலை பந்தர்பூர் என்ற இடத்தில் விட்டார்.

இதற்குப் பின் ஸ்ரீநித்தியானந்த பிரபு ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை சந்தித்தார். இந்த முதல் சந்திப்பை

ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் மிக அழகாக விவரிக்கிறது. பின் தன் வாழ் நாள் முழுவதையும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் சேவையில் ஈடுபடுத்தினார். உண்மையில், ஹரி நாம சங்கீர்த்தனம், மகா மந்திரம் அனைத்திற்கும் உரிமையாளர் ஸ்ரீநித்தியானந்த பிரபு என்று கூறலாம்.

ஒரு சமயம் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கட்டளைப் படி, ஸ்ரீல ஹரிதாஸ தாக்கூராவும், ஸ்ரீநித்தியானந்த பிரபுவும் தெருத் தெருவாகச் சென்று மகா மந்திரத்தை அனைவரும் ஜெபிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தனர். அப்போது ஜகாய், மதாய் என்ற இரு கொடியவர்கள் அவர்களை தாக்கினார்கள். இந்த சம்பவத்தை நாம் முன்னர் பார்த்தோம். இந்த சம்பவத்தில், தன் நெற்றியிலிருந்து இரத்தம் சிந்திய போதும் கூட, ஸ்ரீசைதன்ய மகாபிரபு அவர்களை தண்டிக்க முயன்றதைத் தடுத்தவர் ஸ்ரீநித்தியானந்த பிரபு. பகவானின் அனைத்து விரிவங்கங்களிலும், ஸ்ரீநித்தியானந்த பிரபுவே மிகவும் கருணை உள்ளவர்.

# ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார்

மகாவிஷ்ணுவும் சதாசிவரும் சேர்ந்த அவதாரமே ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார் ஆவார். ஸ்ரீசைதன்ய மகாபிரபு இந்த கலியுகத்தில் அவதரிப்பதற்கு இன்னொரு காரணம் ஸ்ரீஅத்வைத ஆச்சாரியாரின் விஷேச அழைப்பு என்று கூறுவார்கள். கலியுகத்தில் ஜீவன்கள் மிகவும் கஷ்டப்படுவதை சகிக்க முடியாமல் அவர் கங்கை நதியின் கரையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நினைத்து, தன் சாலக்கிராம சிலைக்கு கங்கை நீரையும் துளசி இலைகளையும் அளித்து, சீக்கிரமாகவே இந்த உலகத்தில் அவதரிக்க வேண்டும் என்று மன்றாடினார்.

ஸ்ரீஅத்வைத ஆச்சாரியார் வங்காளத்தில் நவகிராமம் (லௌட் மாவட்டம்) என்ற இடத்தில் 1434-ஆம் ஆண்டு தோன்றினார். ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியவர் இவர். இவரது தந்தை குபேரா பண்டிதர். தாயார் ஸ்ரீமதி நவதேவி. இளமையிலேயே அனைத்து சாஸ்திரங்களையும் சாந்தசாரியார் என்பவரிடமிருந்து நன்றாகக் கற்றவர். சீதாதேவி என்ற பெண்மணியை மணந்து, சாந்திப்பூர் என்ற கிராமத்தில் வசித்து வந்தார். ஸ்ரீமதன் கோபால் என்ற தன் சாலக்கிராம சிலைக்கு தவறாமல் பணிவிடை செய்து வந்தார்.

ஒரு சமயம் பிருந்தாவனத்திற்கு சென்ற போது,

அங்கே ஸ்ரீமதன்மோகன் விக்கிரகத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர் இவரே. பின் ஸ்ரீமதன்மோகனின் விக்கிரகத்தை மதுராவில் வாழ்ந்த புருஷோத்தம சௌபே என்ற ஒரு பிராமணரிடம் கொடுத்துச் சென்றார். இந்த விக்கிரகம் தான் பின் ஸ்ரீசனாதன கோஸ்வாமியிடம் சென்றது. இப்போது இந்த ஸ்ரீமதன்மோகன் விக்கிரகம் ராஜஸ்தானில் கரோலி என்ற இடத்தில் உள்ளது.

அத்வைத ஆச்சார்யார் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை விட வயதில் மூத்தவர். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் குருவான ஸ்ரீஈஸ்வர பூரியின் குருவான ஸ்ரீமாதவேந்திர பூரியைக் குருவாகக் கொண்டவர். அதனால் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஸ்ரீஅத்வைத ஆச்சாரியாருக்கு எப்போதும் மரியாதை கொடுப்பார். தன் சீடர்களைப் போல் உரிமையுடன் கண்டிக்க மாட்டார். தண்டிக்கப்படாத சீடர்கள் ஆன்மீகத்தில் முன்னேற முடியாது என்பதையும், குருவின் கருணை கிடைக்காது என்ற உண்மையையும் அறிந்த ஸ்ரீஅத்வைத ஆச்சார்யார், எப்படியாவது ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன்னையும் மற்ற சீடர்களைப்போல தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு திட்டம் தீட்டினார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு என்ன பிடிக்காதோ அதை செய்தால் கோபத்தில் தன்னைத் தண்டிப்பார் என்று எண்ணினார். மாயாவாதத்தை ஒழிக்கவே ஸ்ரீசைதன்ய மகாபிரபு வந்தவர் என்பதை நன்றாக அறிந்தவர் ஸ்ரீஅத்வைத

ஆச்சாரியார்.

ஒரு நாள் அவர் கங்கை நதி ஓரத்தில், குறிப்பாக எந்த இடத்தில் ஶ்ரீசைதன்ய மகாபிரபு தினமும் குளிக்க வருவாரோ அந்த இடத்தில் நின்று கொண்டு, ஶ்ரீபாத் சங்கராச்சார்யார் போதித்த மாயாவாதத்தை பிரச்சாரம் செய்தார். அவரைச் சுற்றிலும் கூட்டம் கூடியது. ஶ்ரீஅத்வைத ஆச்சாரியாரின் மாயாவாத பிரச்சாரம் அப்போது குளிக்க வந்த ஶ்ரீசைதன்ய மகாபிரபுவின் காதில் விழுந்தது. மாயாவாதத்தைக் கேட்ட ஶ்ரீசைதன்ய மகாபிரபு வெகுண்டு எழுந்தார். நேராக கூட்டத்தை நோக்கி ஓடி வந்தார். பிரச்சாரம் செய்து கொண்டிருந்த ஶ்ரீஅத்வைத ஆச்சாரியாரை தன் கைகளால் பலமாகத் தாக்கினார்.

ஶ்ரீஅத்வைத ஆச்சாரியாருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஶ்ரீசைதன்ய மகாபிரபு தன்னைத் தண்டித்து விட்டார் என்ற ஆனந்தத்தில் அவரது முதிர்ந்த வயதிலும் துள்ளிக் குதித்தார். விசயத்தை அறிந்த ஶ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு இன்னமும் பேரானந்தம்!

# ஸ்ரீகதாதர பண்டிதர்

பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் ஸ்ரீமதி ராதாராணியும் சேர்ந்த அவதாரமே ஸ்ரீசைதன்ய மகாபிரபு என்றாலும், ஸ்ரீராதாராணியின் இன்னொரு அவதாரமே ஸ்ரீகதாதர பண்டிதர். கௌர லீலையில் சக்தி தத்துவத்தையும் பஞ்ச தத்துவத்துடன் சேர்த்துக் கொண்டு நேரடியாக கௌர லீலையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் ஸ்ரீமதி ராதாராணி எடுத்த அவதாரமே ஸ்ரீகதாதார பண்டிதர்.

ஸ்ரீகதாதர பண்டிதர் தன் இளமைப் பருவத்திலிருந்தே ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் மிகவும் அன்பாக இருந்தார். அவர்கள் தங்களுக்குள் சில சமயங்களில் வாதங்களில் ஈடுபட்டாலும், எப்போதும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடனேயே காணப்படுவார்.

இதே சமயத்தில், ஸ்ரீமதி ராதாராணியின் தந்தையான ஸ்ரீவிருஷபானு மகாராஜாவும் கௌர லீலைகளில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீபுண்டரிக வித்யாநிதி என்ற பெயரில் ஒரு பெரிய செல்வந்தரின் குடும்பத்தில் தோன்றினார். ஒரு சமயம் அவர் ஸ்ரீநவத்வீபத்திலுள்ள சட்டகிராமம் என்ற இடத்திற்கு வந்தார். அவரது வருகையை ஸ்ரீகதாதர பண்டிதர் தன் நெருங்கிய பால்ய நண்பனான முகுந்தன் என்பவர் மூலம் அறிந்தார். ஸ்ரீபுண்டரிக வித்யாநிதி ஒரு சிறந்த பக்தர் என்று முகுந்தன் ஸ்ரீகதாதார பண்டிதரிடம் கூறியிருந்ததால், எப்படியாவது இந்த சாதுவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் முகுந்தனுடன் ஸ்ரீபுண்டரிக வித்யாநிதியைக் காணச் சென்றார்.

ஸ்ரீபுண்டரிக வித்யாநிதி மிகவும் விலை உயர்ந்த

பட்டாடை அணிந்திருந்தார். வாயில் எப்போதும் வெற்றிலையை மென்று கொண்டிருப்பதால் உதடுகள் சிவப்பாக இருந்தன. அவர் அமர்ந்திருந்த இடமோ பட்டுத் துணிகளால் பொதியப்பட்டு மிகவும் மென்மையாக இருந்தது. இதைக்கண்ட ஸ்ரீகதாதர பண்டிதர், 'இப்படி ஆடம்பரத்தில் வாழும் இவர் எப்படி பக்தராக இருக்க முடியும்' என்று மிகவும் சந்தேகப்பட்டார். இதை அறிந்த முகுந்தன், ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து சில சுலோகங்களை பாடினார்.

முகுந்தன் பாடிய ஸ்ரீமத் பாகவத்தின் சுலோகங்களைக் கேட்டதும், ஸ்ரீபுண்டரிக வித்யாநிதி தன் இருக்கையிலிருந்து கீழே உருண்டார். "கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று கதறி அழுதார். சிறிது நேரத்தில் மூர்ச்சையாக மயங்கி விழுந்தார். அவரது ஆடைகள் அங்கும் இங்குமாக கலைந்தன.

இதைக் கண்ட ஸ்ரீகதாதர பண்டிதர் வெட்கப்பட்டார். இந்த மிகச் சிறந்த பக்தருக்கு தன் மனத்தினால் அபராதம் செய்து விட்டோமே என்று அங்கலாய்த்தார். அது மட்டுமல்ல, ஸ்ரீபுண்டரிக வித்யாநிதியையே தன் குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என உறுதி கொண்டார். ஸ்ரீபுண்டரிக வித்யாநிதியிடம் தன்னை சீடராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தார். ஸ்ரீபுண்டரிக வித்யாநிதி மிகவும் ஆனந்தமுடன் அதை ஏற்றுக் கொண்டார். பின்னர் ஒரு புனிதமான நாளில் ஸ்ரீகதாதர பண்டிதர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஆசியுடன் தீட்சையும் பெற்றார்.

தன் வயதான காலத்தில் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கட்டளையின் படி, ஸ்ரீஜகன்னாத பூரியில் நிறுவப்பட்ட தோட்ட கோபிநாத் ஆலயத்தில், சேத்திர சன்னியாசியாக வாழ்ந்தார். ஸ்ரீசைதன்ய மகாபிரபு, ஸ்ரீகதாதர பண்டிதரை ஸ்ரீமத் பாகவதத்தை உபன்யாசம் செய்யும் முழுப் பொறுப்பைக் கொடுத்தார்.

ஸ்ரீஜகன்னாத பூரியில், ஸ்ரீகதாதர பண்டிதரின் பாகவத உபன்யாசம் மிகவும் புகழ் பெற்ற ஒன்றாக விளங்கியது.

ஸ்ரீகதாதர பண்டிதர் தன் பெரும்பாலான நாட்களை ஸ்ரீஜகன்னாத பூரியிலுள்ள தோட்ட கோபிநாத் ஆலயத்தில் தான் கழித்தார். இந்த ஆலயத்திலிருக்கும் தோட்ட கோபிநாதரின் விக்கிரகத்தில் தான் ஸ்ரீசைதன்ய மகாபிரபு புகுந்து மறைந்தார். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் மறைவுக்குப் பின், ஸ்ரீகதாதர பண்டிதர் மிகவும் கவலைப் பட்டார். இதனால் அவர் சீக்கிரமாகவே முதுமை நிலையை அடைந்தார். தோட்ட கோபிநாதரின் விக்கிரகத்துக்கு மலர் மாலையைக் கூட அணிய முடியாத அளவு குன்றிப் போயிருந்தார். இதைக் கண்ட கோபி நாதருக்கும் கவலை. எனவே ஒரு சமயம் ஸ்ரீகதாதரர் மிகவும் சிரமப்படும் போது, நிமிர்ந்திருந்த கோபிநாத விக்கிரகம் உட்கார்ந்து கொண்டது. இந்த உட்கார்ந்திருக்கும் விக்கிரகத்தையே நாம் இன்று காண்கிறோம்.

# ஸ்ரீவாச பண்டிதர்

பஞ்ச தத்துவத்தில் வரும் ஸ்ரீவாச பண்டிதர் சுத்த பக்த ஜீவ தத்துவத்தின் பிரதி நிதி. இவர் நாரத முனிவரின் அவதாரம். இவரும் ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றுவதற்கு முன்பே தோன்றியவர். ஸ்ரீவாச பண்டிதரின் மனைவியான மாலினி தேவியும், ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் தாயாரான சசிதேவியும் மிகவும் நெருங்கிய தோழிகள். ஸ்ரீவாச பண்டிதரும் மாலினி தேவியும், ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு இரண்டாவது பெற்றோர்கள் போல் திகழ்ந்தனர்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் நாம சங்கீர்த்தனங்களும், சத் சங்கங்களும், "ஸ்ரீவாச அங்கன்" என்றழைக்கப்பட்ட ஸ்ரீவாச பண்டிதரின் இல்லத்திலேயே நடந்தன. இதே இடத்தில் தான் ஒரு முறை "சந்த் காஸி" என்ற முகம்மதியன் ஹரி நாம சங்கீர்த்தனத்தில் உபயோகித்த மிருதங்கத்தை உடைத்தான். எனவே இந்த இல்லத்திற்கு "கோல் பங்க தங்கா (மிருதங்கம் உடைக்கப்பட்ட இடம்)" என்ற பெயரும் உண்டு. இந்த இல்லத்தை நாம் இப்போதும் காணலாம்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஹரி நாம சங்கீர்த்தனத்திற்கு சந்த் காஸி தடை விதித்தான். யார் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்தாலும் அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், முகமதிய மதத்துக்கு அனைவரும் மாற வேண்டும் என்றும் பயமுறுத்தினான்.

இதைக் கேட்ட ஸ்ரீசைதன்ய மகாபிரபு வெகுண்டு எழுந்தார். ஏராளமான பக்தர்களுடன் சந்த் காஸியின் வீட்டிற்குப்

படையெடுத்தார். கூட்டத்தைக் கண்ட சந்த் காஸி பயந்தான். ஸ்ரீசைதன்ய மகாபிரபு, சந்த் காஸியை வெளியே வருமாறு அழைத்தார். பயந்து நடுங்கியவாறு வந்த சந்த் காஸியிடம் ஸ்ரீசைதன்ய மகாபிரபு வாதம் செய்தார். இந்த வாதத்தை விரிவாக ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் காணலாம்.

முகம்மதியர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் உண்மையான தர்மத்திற்கு எதிரானது என்று வாதிட்டதைக் கேட்ட சந்த் காஸி ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் மன்னிப்புக் கேட்டான். அது மட்டுமன்றி, தான் மிருதங்கத்தை உடைத்த அன்று இரவு ஒரு அரை சிங்கமும் அரை மனிதருமான உருவம் (ஸ்ரீ நரசிம்ம தேவர்) சந்த் காஸியின் மார்பின் மேல் ஏறி நகங்களால் கீறி பயமுறுத்தியதையும், அந்த கீறிய காயத்தையும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் காட்டினான். மேலும் ஹரி நாம சங்கீர்த்தனத்திற்கு எவ்வித தடையும் செய்ய மாட்டேன் என்று சத்தியமும் செய்தான்.

இந்த சந்த் காஸி, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கருணையினால் ஒரு வைஷ்ணவனாக ஆனான். தன் சந்ததிகள் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றும் கூறினான். இந்த சந்த் காஸியின் சமாதியை இன்றும் வைஷ்ணவர்கள் சென்று மரியாதை செலுத்துகிறார்கள்.

ஸ்ரீவாச பண்டிதரின் இல்லமான "ஸ்ரீவாச அங்கன்" ஒரு சிறந்த புனித தலமாகக் கருதப் படுகிறது. இந்த இல்லத்தில் தான் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஒரு முறை தன் சுய ரூபத்தை தன் சகாக்களுக்கும் பக்தர்களுக்கும் காட்டினார்.

# ஹரிநாமம் ஜெபிப்போம்!

இந்த சிறு நூலில், உண்மையான கலியுக அவதாரம் ஸ்ரீசைதன்ய மகாபிரபு என்பதையும், அதற்கான சாஸ்திர ஆதாரங்களையும் பார்த்தோம். பிரம்ம தேவரின் ஒரு பகலில் ஒரே ஒரு தடவை மட்டும் சுயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கோலோகத்திலிருந்து இறங்கி பூலோகத்து வருகிறார். குறிப்பாக அவர் வரும் துவாபர யுகத்திற்கு அடுத்து வரும் தன்ய கலியுகத்தில் கோலோகத்தின் இன்னொரு பாகமான ஸ்வேதத்வீபத்திலிருந்து ஸ்ரீசைதன்ய மகாபிரபு வருகிறார். ஸ்ரீகிருஷ்ணரும் ஸ்ரீமதி ராதா ராணியும் ஒன்றாக சேர்ந்து தோன்றிய பிரேம புருஷோத்தமரான ஸ்ரீசைதன்ய மகாபிரபுவினால் மட்டுமே பிரேம பக்தியை கொடுக்க முடியும்.

எனவே, நாமும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீசைதன்ய மகாபிரபுவாக அவதரித்து நமக்கு கருணையுடன் அளித்த ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தை தினமும் உச்சரித்து, பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் சேவையில் ஈடுபடுவோம். பகவான் கருணையினால் அனைத்து களங்கங்களிலிருந்தும் விடுபட்டு பிரேம பக்தி பெற்று நிரந்தரமான பேரானந்தம் அடைவோம். கோலோகம் சென்று பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பக்தி சேவைகளில் ஈடுபடுவோம்!

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

# மகாபிரபுவுக்கு ஒரு கோகுல் பவன் பாடல்

மகா பிரபு தவ பத சரணம்

வந்தே 'ஹம் சர்வ தவ சரணம்
ராதா மன்யதம் ரஸ கூபம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம் ... (மகா)

அதி சுத பாவம் அனுசீலம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம்
சசி சுத பாலம் தய ரூபம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம் ... (மகா)

சங்கீர்த்தன மயம் தன மூலம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம்
சுந்தர தேவம் அதி ஷோபம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம் ... (மகா)

மந்திர தானம் யுக க்ஷேமம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம்
சந்திர உதயம் நவத்வீபம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம் ... (மகா)

வந்தே 'ஹம் சர்வ தவ சரணம்
வந்தே 'ஹம் சர்வ தவ சரணம் ... (மகா)

ஹரே கிருஷ்ணா!

நன்றி, வணக்கம்.